Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 041 | புதன்கிழமை | மார்கழி 21 ஆம் நாள் 06 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## 13 வரை மழை!

யாழ்ப்பாணம், ஜன.6
வடக்கு மாகாணத்தில் தற்போது காணப்படும் மழையுடனான காலநிலை எதிர்வரும் 13ஆம் திகதி வரையில் தொடரும் வாய்ப்புக்கள் உள் 14 >

# அரசியல் கைதிகள் விவகாரம்: நேரடிப் பேச்சுக்கு அரசு தயார்

## மாவையிடம் தினேஷ் நேற்று தெரிவிப்பு

கொழும்பு, ஜனவரி 6
சிறைச்சாலைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் தொடர்பில் தமிழ்க் கட்சிகளுடன் நேரடிப் பேச்சுக்குத் தயார் என்று அரசு நேற்று அறிவித்துள்ளது. 18 >

## வாழ்வாதாரத்தைக் கருதி கடையைத் திறக்க அனுமதிக்குக

*மருதனார்மடம் சந்தைச் சூழலிலுள்ள வர்த்தகர்கள் கூட்டாகக் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜன.6
மருதனார்மடம் சந்தைக் கொத்தணி பரவலையடுத்து மூடப்பட்டுள்ள தமது வர்த்தக நிலையங்களை மீளத் திறப்ப 19 >

## நிலைமைகளைப் பொறுத்து கடைகளைத் திறக்க அனுமதி!

*சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்*

யாழ்ப்பாணம், ஜன.6
மருதனார்மடம் கடைத் தொகுதிகளை திறப்பதற்கான அனுமதி இன்னமும் 19 >

## தமிழர்களின் கோரிக்கையை ஏற்று அரசியல் கைதிகளை விடுவிக்குக!

*கூட்டமைப்பு கோரிக்கை*

கொழும்பு, ஜன.6
ஒட்டுமொத்த தமிழ் மக்களதும் கோரிக்கையை ஏற்று, தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 18 >

## பூநகரி, அளவெட்டியில் மூவருக்கு கொரோனா!

கிளிநொச்சி, ஜன.6
பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பள்ளிக்குடாவைச் சேர்ந்த இருவருக்கும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அளவெட்டியைச் சேர்ந்த ஒரு 19 >

ஜெனிவா பிரேரணைக்காக–

## மூன்று கட்சிகளும் இன்று முக்கிய பேச்சு

கொழும்பு, ஜன.6
இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் 19 >



## கோத்தா, மஹிந்த, தினேஸை தனியே சந்திக்கும் ஜெய்சங்கர்

*நாளை கூட்டமைப்புடன் பேச்சு*

கொழும்பு, ஜன.6
இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுநேற்று இலங்கைவந்தார். இலங்கை வெளிவிவகார அமைச் 19 >

## மயங்கி விழுந்த இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், ஜன.6
மயங்கி வீழ்ந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பய 19 >

## வடக்கில் 13 பேருக்கு நேற்றுத் தொற்று

யாழ்ப்பாணம், ஜன.6
வடக்கு மாகாணத்தில் நேற்று 13 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வ 14 >

## கொரோனாத் தடுப்பூசி உடன்பாட்டுக்கு அனுமதி

கொழும்பு, ஜன.6
கோவக்ஸ் திட்டத்தின் ஊடாக கொரோனாத் தடுப்பூசிகளைப் பெறுவதற்கான உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு அமைச்சரவை ஒப்பு 14 >

## 23 குடும்பங்கள் இதுவரையில் பருத்தித்துறையில் தனிமை!

14 >

## தரம் 1 மாணவர்களுக்கு பெப்ரவரியே பாடசாலை

கொழும்பு, ஜன.6
2021ஆம் ஆண்டு முதலாம் தரத்துக்கு அனுமதி 14 >

## அத்துரலிய தேரர் 224 ஆவது எம்.பி.!

கொழும்பு, ஜன.6
அத்துரலிய ரத்தனதேரர் நாடா 14 >

## விடுதலை செய் அரசே!

*அரசியல்கைதிகளுக்காக வடக்கு, கிழக்கில் நேற்று போராட்டங்கள்*

யாழ்ப்பாணம், ஜன. 6
சிறைச்சாலைகளில் வேகமாக பரவிவரும் கொரோனாத் தொற்று அபாயத்திலிருந்து தமிழ் அரசியல் கைதிகளைப் பாதுகாப்பதற்காக அவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி 14 >

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி



பலமான சக்திகள்
ஒன்றிணைந்து டிஜிட்டல் தொழில்நுட்ப வரலாற்றை உருவாக்குகின்றன
ஸ்ரீ லங்கா டெலிகொம் மற்றும் மொபிடெல் சேவைகள் இணைந்து புதிய பயணத்தை ஆரம்பித்துள்ளன.
SLTMOBITEL

# ஐ.சி.சி, ஜெனிவா என்ற இரண்டு தளங்களையும் பயன்படுத்துவோம்

நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் உருத்திரகுமார் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 6
இலங்கையை மையப்படுத்தி ஜெனிவா ஐ.நா மனித உரிமைகள் சபையின் அமர்வு முக்கிய பேசுபொருளாக மாறியுள்ள நிலையில், சர்வதேச நீதிமன்றமா அல்லது ஐ.நா மனித உரிமைகள் சபையா என்ற கேள்விக்கு இடமின்றி இரண்டு தளங்களையும் நாம் கையாள வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார். இணையவழி கருத்தாடலொன்றில் பங்கேற்று அவர் இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:

**ஜெனிவாவின் முக்கியம்**

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையை அனுப்பினால், 2009ஆம் ஆண்டு வரையிலான சர்வதேச குற்றங்களான இனப் படுகொலையைத்தான் அது பார்க்கும். ஆனால் தற்போது தமிழர் தாயகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நில அபகரிப்பு, அச்சுறுத்தல்கள், போர் கைதிகள் விடுதலை (அரசியல் கைதிகள்) போன்ற மனித உரிமை மீறல்களை கண்காணிக்கும் அதிகாரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இல்லை. அவ்விடயங்கள் ஜெனிவாவில்தான் இருக்கும். ஜெனிவாவில் மட்டும் எமது அரசியல் போராட்டம் தங்கியிருப்பதாகக் கருதி விடக்கூடாது. பல்வேறு தளங்களை நாம் பாவிக்க வேண்டும்.

**மழுங்கடிக்கக் கூடாது**

எல்லா நாடுகளது இணக்கத்தையும் பெறவேண்டும் என்பதற்காக, எங்கள் கோரிக்கையை நாம் மழுங்கடிக்கக் கூடாது. பாதிக்கப்பட்ட மக்களுடைய நிலைப்பாட்டை நாம் தெளிவாக அந்த நாடுகளுக்கு முன்வைக்க வேண்டும். அந்த நாடுகள் ஏற்றுக்கொண்டாலும் சரி, ஏற்காவிட்டாலும் சரி, நாம் எமது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து, அதனை அடுத்த தளங்களை நோக்கி கொண்டு செல்ல வேண்டும். ஐ.நா மனித உரிமைகள் சபையில் பொறுப்புக்கூறலுக்கு எதனை கோரப்போகின்றோம்? குற்றத்தைப் புரிந்த இலங்கையிடமே பொறுப்புக்கூற கொடுங்கள் என்றா கோரப்போகின்றோம் ?

**ஐ.சி.சிதான் நிலைப்பாடு**

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையைப் பாரப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் 2015ஆம் ஆண்டு கையெழுத்து இயக்கத்தை நாம் நடத்தியிருந்தோம். 1.6 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் ஒப்பமிட்டிருந்தனர். ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் அறிக்கையில், சில தமிழ் அமைப்புக்களிடத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வலுவாக இருக்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

**சர்வதேச விசாரணை**

பொறுப்புக் கூறலுக்கான நிலைப்பாடாக 'சர்வதேச விசாரணை', 'சர்வதேச நீதிப் பொறிமுறை' ஆகிய விடயங்கள் தாயக தமிழர் அரசியல் தரப்புக்களிடத்திலும், புலம்பெயர் தமிழர் அமைப்புக்களிடத்திலும் இன்று பேசுபொருளாகியுள்ளன. இனப்படுகொலையை புரிந்தது தனிநபர்களோ, இராணுவத் தளபதிகளோ, பற்றாலியன்களோ அல்ல. மாறாக முழு சிங்கள தேசமும் (சிங்கள அரசு) இக் குற்றத்தைப் புரிந்துள்ளது. எனவே இலங்கை அரசையே நாம் குற்றவாளி க்கூண்டில் நிறுத்த வேண்டும். குற்றவாளிக்கூண்டில் என்பது சிறையில் அடைப்பதல்ல. அதற்கான பொறுப்புக்கூறலேயாகும்.



**பரிகார நீதியே வேண்டும்**

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது விடுதலைப் போராட்டம் நீதிக்கான போராட்டமாக நடைபெற்று வருகின்றது. வெறுமனே சட்டப் போராட்டமாக மட்டும் குறுக்கிப்பார்க்காமல், அரசியல் போராட்டமாக கருதிக் கொண்டு தான் நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். பரிகார நீதியே எமது மக்களுக்கான தீர்வாக அமையும். நிலைமாறுகால நீதியல்ல. நிலைமாறுகால நீதி என்பது, ஆர்ஜென்டீனாவில் இருந்த அரசு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தது. அதற்கு பின்னாக வந்த அரசு அதனை நிவர்த்தி செய்தது. அதுதான் நிலைமாறுகால நீதியின் அடிப்படைக் கோட்பாடாகும். ஆனால் இந்த நிலைமாறுகால நீதி இனப்படுகொலைக்கு உள்ளான எமக்கு நீதியைத் தரும் என்று நம்பவில்லை.
நாடுகளை மையப்படுத்தியே உலக ஒழுங்குகள் இயங்குகின்றன. சர்வதேச நீதிப்பொறிமுறைகளும் நாடுகளை மையப்படுத்தியே இயங்குகின்றன. மனித உரிமைப் பேரவையிலும் நாடுகள்தான் முடிவுகளை எடுக்கின்றன. தமிழீழத் தேசியத் தலைவர் குறிப்பிட்டது போல் நாடுகள் தர்மத்தின் சக்கரத்தில் சுழல்வதில்லை. நாடுகள் தமது அரசியல் நலன்களின் அடிப்படையில்தான் இயங்குகின்றன. இந்த யதார்த்தங்களைப் புரிந்துகொண்டுதான் நாம் எங்களுடைய நலன்களின் அடிப்படையில் நிலைப்பாடுகளை எடுக்க வேண்டும் - என்றார். (ம-ஒ)

---

யாழ். பல்கலைக்கழக

## சின்னம் மாற்றப்பட்ட ரீசேட் அணிவதைத் தவிர்த்திடுக!

மாணவர் ஒன்றியத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 6




யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சித்த மருத்துவத் துறை மாணவர்களின் பாவனைக்கென சித்த மருத்துவ மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்பட்ட ரீசேட்களில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இலட்சினை மாற்றப்பட்டிருந்தமை சர்ச்சையாகியுள்ள நிலையில் அந்த ரீசேட்களை அணிவதைத் தவிர்க்க வேண்டும் என்று மாணவர் ஒன்றியத் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.
ரீசேட்களின் பின்புறத்தில் பல்கலைக்கழக இலட்சினை பொறிக்கப்பட்டமை தொடர்பாக இன்று சமூக ஊடகங்களில் வெளிவந்த கருத்துக்கள் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து, இது தொடர்பில் துணைவேந்தர் விசாரணை களை மேற்கொண்டுள்ளார்.
இதற்கிடையில் விடயம் தொடர்பில் சித்த மருத்துவத் துறையின் மாணவர் ஒன்றியத் தலைவர் விளக்கம் வழங்கியுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:
ரீசேட்டின் முன்புறத்தில் பல்கலைக் கழகத்தின் இலச்சினையைப் பொறிப்பதற்கு முறையான அனுமதி பெறப்பட்டிருந்த போதிலும், ரீசேட் வடிவமைப்பில் ஏற்பட்ட தவறு காரணமாகவே பின்புறத்தில் ஆங்கில எழுத்துகள் பொறிக்க நேர்ந்தது. அதற்காக எங்களது வருத்தங்களைத் தெரிவித்துக்கொள்ளும் அதேநேரத்தில் இனிவரும் காலங்களில் இந்த ரீசேட் அணிவதைத் தவிர்க்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளோம் என்றார். (ம-20)

---

## புத்தாண்டுக்குமுன் தடுப்பூசி

கொழும்பு, ஜன. 6
கொரோனாவுக்கான தடுப்பூசியை இலங்கையர்கள் எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று, தடுப்பூசி விவகாரங்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார். (ம-ஒ)

---

## ஒரே இரவில் 4 கோயில்களில் கைவரிசை காட்டிய திருடர்கள்

வவுனியா, ஜன. 6
வவுனியா கந்தபுரம் மற்றும் தவசிகுளம் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு மாத்திரம் 4 ஆலயங்களில் திருட்டுச் சம்பவங்கள் அரங்கேறியுள்ளன. கந்தபுரம் பிள்ளையார் கோயில் மற்றும் அம்மன் கோயில், பொன்னாவரசங்குளம் பிள்ளையார் கோயில், தவசிகுளம் வைரவர் கோயில் ஆகியவற்றிலேயே இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.
கோயில்களுக்குள் நுழைந்த திருடர்கள் கதவுகளை உடைத்து உண்டியல்களையும், ஒலிபெருக்கி சாதனங்களையும் திருடிச்சென்றுள்ளனர். இரண்டு ஆலயங்களில் உண்டியல் பணத்தை மாத்திரம் எடுத்து விட்டு உண்டியல்களை வீசி விட்டுச் சென்றுள்ளனர். மற்றைய இடங்களில் உண்டியல்களையும் சேர்த்து எடுத்துச் சென்றுள்ளனர். (ஒ-110)

---

## 'மணி அணி' நீக்கத்துக்கு நீதிமன்றம் தடையுத்தரவு!!

யாழ்ப்பாணம், ஜன. 6
மணிவண்ணன் சார்பு உறுப்பினர்களை, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் பதவிகளிலிருந்து நீக்குவதற்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) எடுத்த நடவடிக்கைக்கு, வழக்கு விசாரணை முடிவடையும் வரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.
யாழ்ப்பாணம் மாநகரசபை மேயர் வி.மணிவண்ணன் மற்றும் ஏனைய 3 மாநகர சபை உறுப்பினர்கள், சாவகச்சேரி நகர சபையின் 2 உறுப்பினர்களை கட்சியை விட்டு நீக்க அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் நடவடிக்கையெடுத்தது.
இது தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கட்சித் தலைவர், செயலரின் கையொப்பத்துடன் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.
அதைத் தொடர்ந்து 21 நாள்களின் பின்னர், குறிப்பிட்ட 6 உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பதவிகளும் வறிதாவதாக தெரிவத்தாட்சி அலுவலரால் அறிவிக்கப்பட்டது.
இந்த அறிவித்தலுக்கு எதிராக 6 உறுப்பினர்களும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். இது தொடர்பில் ஆராய்ந்த நீதிமன்றம், இந்த உத்தரவுக்கு எதிராக 14 நாள்கள் இடைக்காலத் தடைவிதித்தது. கடந்த சில வழக்கு தவணைகளில் ஒவ்வொரு 14 தினங்களுக்கும் தடையை நீடித்து வந்தது.
நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, வழக்கு விசாரணை முடிவடையும் வரை உறுப்புரிமை நீக்கத்துக்கு இடைக்கால தடைவிதித்தது. (ஒ-இ)

---

## போராட்டத்தை குழப்பிய பொலிஸார்

அம்பாறை, ஜன. 6
அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தில் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியை கொரோனாத் தொற்றைக் காரணமாக முன்னிறுத்தி, பிரதேச செயலக வளாகத்துக்கு வருகைதந்த பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.
ஊடகங்களுக்கு அரசியல் பிரமுகர்களும், பொது அமைப்பைச் சார்ந்தவர்களும் கருத்து தெரிவிப்பதை பதிவுசெய்ய வேண்டாம் என்று கூறியதோடு போராட்டப் பதாகைகளையும் பொலிஸார் கைப்பற்றிச் சென்றனர். (ஒ-இ)

# உலகறிந்த உதயனை யாரும் இலகுவில் ஒன்றும் செய்யமுடியாது

## வழக்குத் தாக்கல் தொடர்பில் கண்டிக்கிறார் தவிசாளர் நடனேந்திரன்

**யாழ்ப்பாணம், ஜன. 6**

**வடக்கில் மட்டுமின்றி உலகத்திலும் பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருப்பது உதயன். உலகத்தில் வாழும் தமிழர்களுக்கு பாதுகாவலன் மட்டுமின்றி செய்தியை உடனுக்குடன் வழங்கி தமிழர்களின் நிலையான இருப்பை உறுதிசெய்பவன் உதயன். இன்று நேற்றல்ல பல தசாப்த காலமாக உயிரோட்டமாக இயங்கி வருகிறான். இந் நிலையில் உதயனை யாரும் இலகுவில் ஒன்றும் செய்துவிடமுடியாது.**

இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் த.நடனேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நாடறிந்த உதயன் மீது தொடரப்பட்ட வழக்கு காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வரும் அரசினரின் தமிழின அடக்குமுறை நிகழ்ச்சி திட்டத்தின் தொடர்திட்டம், உலகின் தமிழர்களின் இதயத்தில் தினமும் காலை உதயமாய் உதிக்கும் உதயன் பத்திரிகையை அழிப்பதற்கு கலத்துக்கு காலம் பதவிக்கு வரும் அரசுகளால் கங்கணங்கள் இடப்பட்டு வருவதை நாம் அறிவோம்.

தேசத் துரோகிகளாலும் கடந்த அரசுகளாலும் இழைக்கப்பட்ட அநீதிகளையும் அடக்குமுறைகளையும் வெளிச்சம் போட்டுக்காட்டிய உதயன் மீது 2020 இலும் அரசால் அநீதி இழைக்க கங்கணம் கட்டியதை உலகில் வாழும் நீதிமான் கள், சட்டத்தரணிகள், பேராசிரியர்கள், கல்விமான்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் ஆழமாக பார்க்க வேண்டும். கண்டித்துக் குரல் கொடுக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளின் தலைவரின் படத்தை பிரசுரித்தமை தவறானது என்பதற்காக உதயன் மீது வழக்குத் தொடர்ந்தமை ஏற்றுக் கொள்ள முடியாதது.

உலகளவில் அரசியல் அடக்குமுறைகள், பழிவாங்கல்களுக்கு எதிராக ஊடகங்கள் உலகத்தின் கண்களாகவும், தூண்களாகவும் இருக்கின்றன. அதனால் அவற்றை ஒடுக்குவது, அழிப்பது என்பது ஊடக சுதந்திரத்தை மீறும் செயற்பாடாகும்.

வடக்கில் எத்தனையோ ஊடகங்கள் மக்கள் முன் பிரகாசிக்கின்றன. எனினும் உதயனை பார்க்காதவர்கள் என்று எவரும் இருக்க முடியாது.

கடந்த காலத்தில் தேசத்துக்கு விரோதமான சக்திகளின் தாக்குதலால் உதயனில் பணியாற்றிய எத்தனையோ பணியாளர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. எத்தனையோ பணியாளர்கள், ஆசிரியர்கள், செய்தியாசிரியர்கள், அலுவலக செய்தியாளர்கள், பிராந்திய செய்தியாளர்கள், செய்தியாளர்கள் என்று பெரும்பாலானோர் தமது உயிர்ப் பாகாப்புக்காக இந்த நாட்டை விட்டு வெளியேறிய வரலாறு என்பது இங்கு பதியப்பட்டுள்ளது.

உதயன் ஊடகத்தின் வளர்ச்சியை ஏற்றுக்கொள்ளாத சிலர் இன்று அதற்கு எதிராக செயற்படுகின்றனர்.

நாடு தழுவிய ரீதியில் ஊடகத்துறை சுதந்திரம் வலியுறுத்தப்பட்டு வரும் இக்காலப்பகுதியில் சிறுபான்மையின தமிழர்களின் குரலாய் அன்று முதல் இன்றுவரை ஒலித்துவரும் உதயன் மீது போடப்பட்ட வழக்கு உடன் வாபஸ்பெறப் படுவது காலத்தின் தேவையாகும், என்றுள்ளது. (ஓ)

---

### உதயன் மீதான வழக்கு

# சர்வாதிகாரத்தின் வெளிப்பாடு

கிளிநொச்சி, ஜன. 6

ஊடக சுதந்திரத்தில் அரசு கை வைப்பது சர்வாதிகாரத்தின் வெளிப்பாடே என்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உப தவிசாளர் முத்துக்குமார் கஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒரு நாட்டினுடைய ஜனநாயகத்தை வெளிப்படுத்துகின்ற கூறுகளான சட்டவாக்கத்துறை, நீதித்துறை மற்றும் நிர்வாகத்துறையுடன் நான்காவது தூணாக ஊடகத்துறை வெளிப்பட்டு நிற்கின்றது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் ஜனநாயகம் குழிதோண்டிப்புதைக்கப்பட்டுள்ளதுடன் ஊடக சுதந்திரம் ஆட்சியில் அமரும் ஒவ்வொரு தேரவாத பௌத்த மனோநிலையிலுள்ள சிங்கள பேரினவாத அரசுகளாலும் தொடர்ச்சியாக அடக்கப்பட்டே வந்திருக்கின்றது.

அதிலும் குறிப்பாக தமிழ் மக்களின் உண்மையின் குரலாக பல தசாப்தங்கள் கடந்தும் மக்கள் மனம் நிறைந்த ஒரேயொரு தமிழ் நாளிதழான உதயன் பத்திரிகை மீது சிங்கள பேரினவாத அரசு தனது இராணுவத்தினரின் மூலமும், ஒட்டுக்குழுக்கள் மூலமும் கொட்டித் தீர்த்த வன்மம் என்பது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது.

அந்த அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினத்தன்று அவருடைய ஒளிப்படத்தை பிரசுரித்தமைக்காக உதயன் பத்திரிகை மீது பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளமையானது ஊடக சுதந்திரத்தை அரசு சிதைப்பதற்கே வழிவகுக்கும் வகையிலானது.

ஊடகங்கள் தமது செல்நெறி தவறாமல் சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு உரிய தரப்புக்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன் உதயன் பத்திரிகை மீதான அரசின் வன்மம் தீர்க்கும் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கிறேன், என்றுள்ளது. (ஓ,6)

---

### பாதிக்கப்பட்டோரின் குரலாக ஒலிக்கும்

# உதயனை முடக்குவதற்கு ஒருபோதும் அனுமதியோம்



## வவு. வடக்கு பிரதேச சபை தவிசாளர் கண்டனம்

வவுனியா, ஜன. 6

உதயனும் அதன் ஆசிரியபீடமும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான பங்களிப்பை செய்து கொண்டிருக்கின்றன. அதன் மீது தொடரப்பட்ட வழக்குக்கு எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறு வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் ச.தணிகாசலம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்றைய உலகிலே செய்திகள், தொடர்பாடல்கள் மற்றும் உலகியல் விடயங்கள் சகலதையும் வெளிப்பரப்பில் மக்களைச் சென்றடைய செய்வதற்கு ஊடகங்களும் அதன் ஊடகவியலாளர்களுமே மூல கர்த்தாவாக விளங்குகின்றனர்.

அரச இயந்திரங்களின் முறைகேடுகளை வெளிப்படுத்தி அதனைச் சீர் செய்யும் சர்வ வல்லமை ஊடகங்களுக்கே உண்டு. உதயன் பத்திரிகையும் அதன் ஆசிரியபீடமும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான பங்களிப்பை செய்து கொண்டிருக்கின்றன.

தமிழர் வாழ்வியலில் தமிழ் மக்களின் ஏக தலைவனாக தந்தை செல்வநாயகத்துக்குப் பின் விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனையே மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர். அது தமிழர் தம் வாழ்வில் மறக்கப்படக் கூடியதுமல்ல. அந்த வகையில் அவரது படத்தைப் பிரசுரித்தமைக்காக அப் பத்திரிகை தண்டிக்கப்பட வேண்டும்எனக்கருதுவது சமநிலையின்மை நிலைமையைத்தான் வெளிப்படுத்தும்.

இத்தகைய செயலை நடுநிலையாளர்கள் கண்டிக்க வேண்டியது தார்மீகக் கடமையாகும். அந்த வகையில் பாதிக்கப்பட்ட எமது இனத்தின் சார்பில் எனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றேன், என்றுள்ளது. (ஓ,110)

---

# விதிகளுக்கு முரணாக நிகழ்வுகள்: மீறுவோருக்கு கட்டாய தனிமை

## சாவ.சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

கொடிகாமம், ஜன.6

சுகாதார விதிமுறைகளை மீறி நிகழ்வுகளை நடத்துபவர்கள் கட்டாய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்படுவதுடன், பி.சி.ஆர் பரிசோதனைக்கும் உட்படுத்தப் படுவார்கள் என்று சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

மேலும் நிகழ்வில் கலந்துகொள்வோரின் பெயர்ப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பெயர்ப்பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் அந்த நிகழ்வில் பங்குபற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

நிகழ்வுகளுக்கு அனுமதி பெறும்போது எல்லாவற்றுக்கும் சம்மதம் தெரிவித்து விட்டு நிகழ்வுகளில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதுவிட்டால் நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவதோடு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டு சட்ட நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற மரணச் சடங்குகள் உள்ளிட்ட நிகழ்வுகளில் மக்கள் கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பின்பற்றத் தவறியுள்ளமை அவதானிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளமையைத் தொடர்ந்தே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ற-159)

## 423 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜன. 6

கொரோனா பரவல் காரணமாக நாட்டு திரும்ப முடியாமல் வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 423 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பினர்.

இதன்படி இவர்கள் ஒன்பது விமானங்களின் மூலமாக கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களுக்கு விமான நிலையத்தின் மருத்துவ ஆய்வுகூடத்தில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ரி5)



இரத்மலானை, கொத்தலாவலபுர சமாதி பௌத்த மையத்தின் தங்க வேலியுடனான போதி சுவர் மஹிந்த ராஜபக்சவால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த தங்க வேலியுடனான போதி சுவர் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊழியர்களின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டது. (ரி5)

## விரும்புபவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை

சாவகச்சேரி,ஜன.6

தென்மராட்சி பிரதேசத்தில் சுய விரும்பின் பேரில், பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ள விரும்புவோர், தமது பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமக்குத் தொற்று ஏற்பட்டுள்ளதா என்று சந்தேகிப்பவர்கள், தயங்காமல் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் தொடர்புகொண்டு சுய விருப்பின் பேரில் பரிசோதனை செய்து கொள்ள முடியும். கொரோனாத் தொற்றாளர்களுடன் பழகியவர்கள் தம்மையும், சமூகத்தையும் பாதுகாக்கும் நோக்கில் தாமாக முன் வந்ரிது சோதனை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# இணைந்த கட்சிகளால் எமக்குத் தீர்வு கிட்டும்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள் நம்பிக்கை

**கிளிநொச்சி,ஜன.6**

**மூன்று கட்சிகளும் கடந்த காலங்களைப் போன்றல்லாது ஒன்றாக இணைந்து, எமக்குத் தீர்வைப் பெற்று தர முன்வந்துள்ளமை மகிழ்ச்சியாக உள்ளது என்று வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது சங்கத் தலைவி கலாரஞ்சினி தெரிவித்தார்.**

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது,

ஐ.நா. மனித உரிமைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு கால நீடிப்பை வழங்கக்கூடாது என்று அனைவரும் ஒன்றிணைந்து கோரிக்கையை முன்வைக்க உள்ளோம். இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி, அதன் ஊடாக ஒரு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

பாதிக்கப்பட்ட எமக்கு நீதி கிடைக்க சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து நீதியான பொறிமுறை ஒன்றை உருவாக்கி, நீதியைப் பெற்றுத் தரும் என்று நம்புகின்றோம் - என்றார். (க-6)

## காணி இணக்க சபையின் செயற்பாடுகள் மீள ஆரம்பம்

வவுனியா,ஜன.6

வவுனியா மாவட்ட சிறப்பு காணி இணக்க சபையின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அதன் தவிசாளர் இ.நவரட்ணம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக இணக்க சபைச் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் எதிர் வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை முதல் வவுனியா மாவட்ட காணி இணக்க சபையின் செயற்பாடுகள் சுகாதார வழிமுறைக்களைப் பின்பற்றி மீள ஆரம்பிக்கப்படும். இதன்படி 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் ஒரு மணிவரை செட்டிகுளம் பிரதேச செயலகத்திலும், 10 ஆம் திகதி காலை 9 மணி முதல் ஒருமணிவரை வவுனியா குடியிருப்பு இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையிலும், 17 ஆம் திகதி புளி யங்குளம் இராமனூர் தனிநாயகம் வித்தியால யத்திலும் இணக்க சபை செயற்பாடுகள் ஆரம்பமாகும் அதனைத் தொடர்ந்து வழமை போல் காணி இணக்க சபையின் செயற்பாடுகள் நடைபெறும் என்றார். (ஐ-110)

### கைப்பற்றப்படும்

## போதைப்பொருள்களை உடன் அழிப்பதற்கு முடிவு

கொழும்பு,ஜன.6

நாட்டில் கைப்பற்றப்படும் போதைப் பொருள்களின் மாதிரிகளை தக்கவைத்து பின்னர், ஏனையவற்றை பொது வெளியில் வைத்து உடன் அழிக்க அரசு முடிவு செய்துள்ளது.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர இதனைத் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட 717 கிலோ கிராம் போதைப்பொருள்களுடன் ஒப்பிடும்போது 2020 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 740 கிலோ போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று அமைச்சர் மன்றில் தெரிவித்தார்.

இலங்கையில் போதைப்பொருள் கடத்தல் குறையவில்லை என்று சுட்டிக்காட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்கள் தொடர்ந்தும் விநியோகிக்கப்படுகின்றன என சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சரத் வீரசேகர, நாட்டில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்கள் நீதிமன்றங்களில் வழக்கு முடிவடையும் வரை பல ஆண்டுகளாக ஆதாரமாக வைக்கப்படுவதால், இதுபோன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன என்று தெரிவித்தார்.

எனவே ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் அடிப்படையில், சட்ட நடவடிக்கைகளுக்கு மாதிரிகளை வைத்துக் கொண்டு, கைப்பற்றப்பட்ட அனைத்துப் போதைப் பொருள்களையும் உடனடியாக அழிக்க அரசு முடிவு செய்துள்ளது என்றார். (க-இ)



## தனியார் பஸ் விபத்து

கிளிநொச்சி.ஜன.6

முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ், முன்னால் சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது, சாவகச்சேரியில் இருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த ஹன்ரருடன் மோதியது.

இந்த விபத்து பளை இயக்கச்சியில் நேற்றுக் காலை நடந்துள்ளது.

விபத்தில் இரு வாகனங்களின் சாரதிகளும் காயமடைந்தனர். அவர்கள் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (க-113)

## பதிவாளர் அலுவலகம் புதிய கட்டடத்தில்

கொழும்பு,ஜன.6

பதிவாளர் நாயக திணைக்களத்தின் கொழும்பு மாவட்ட அலுவலகம் புதிய கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

செயல்திறன்மிக்க சேவையை பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் பதிவாளர் நாயக திணைக்களத்தின் கொழும்பு மாவட்ட அலுவலகம் மற்றும் மத்திய காப்பகம் பத்தரமுல்லையில் உள்ள புதிய கட்டடத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்சவின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-இ)

## நாட்டில் ஒற்றுமை மேலோங்க பௌத்த வளங்களைப் பாதுகாக்குக!

### கூறுகிறார் கிழக்கு ஆளுநர்

திருகோணமலை, ஜன.6

எமது நாட்டில் காணப்படும் பௌத்த நாகரீகங்களை நாம் பாதுகாக்க வேண்டும் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

மேலும், ஒரு நாடு அபிவிருத்தி அடைய, அனைவரின் ஆதரவும் நமக்கு இருக்க வேண்டும்.

நஞ்சற்ற விவசாயத்தை அறிமுகப்படுத்தினோம். இதன் மூலம் எங்கள் மாகாணம் முன்மாதிரி யான விவசாயம் கொண்ட மாகாணமாக இருக்க வேண்டும். கிழக்கு மாகாணம் சிறந்த தொல்பொருள் தளங்களைக் கொண்ட ஒரு மாகாணமாகும். பெரும்பாலான தொல்பொருள் இடங்கள் பௌத்த நாகரிகத்



துக்கு சொந்தமானவை. அவற்றை நாம் பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் ஒற்றுமையுடனும் ஒத்துழைப்புடனும் வாழ முடியும் - என்றார். (ந)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கருணைப் பெருங்கடலே...!


பௌத்த மதத்தின் எண்ணக்கருக்களில் அகிம்சைக்குத்தான் எப்போதும் முதலிடம். அதனால்தான் கௌதம புத்தரின் உருவச் சிலைகள் எல்லாமே காருண்யம் ததும்பும் வகையில் செதுக்கப்பட்டன. அந்தச் சிலைகளைப் பார்க்கும் ஒவ்வொரு பௌத்தனின் மனதிலும் அதுவரை இருந்த தீய குணங்கள் அகன்று, புத்தரின் கருணைக்குணம் மட்டுமே அவர்களிடம் இருக்கவேண்டும் என்பதை உணர்த்தவே புத்தரின் சிலைகள் கருணையைச் சிந்துபவையாக உருவாக்கப்பட்டனவாம். ஆனால் 'நான் தனிச் சிங்கள வாக்குகளாலேயே பதவிக்கு வந்தேன், இது ஒரு பௌத்த அரசு' என்று மார்தட்டிக் கொள்ளும் கோத்தாபய அரசு, புத்தர் வேண்டிநின்ற கருணைக்குணத்தை அறவே தொலைத்துவிட்டது அல்லது கருணை என்பதற்கு புதிய அர்த்தம் கற்பிக்க முனைகின்றது.

நீதிமன்றால் மரணதண்டனை விதிக்கப்பட்ட மிருசுவில் படுகொலையாளி மன்னித்து விடுவிக்கப்பட்டார். அதேபோல துப்பாக்கிகளையும், வெடிமருந்துகளையும் தன் வசம் வைத்திருந்தபோது கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு சிறையில் இருந்த பிக்குவும் அதே பொது மன்னிப்பில் விடுதலையாகியுள்ளார். இந்த வரிசையில் சக நாடாளுமன்ற உறுப்பினரை பலரும் பார்த்திருக்க, பகிரங்கமாக, சுட்டுக்கொலை செய்த துமிந்த சில்வாவுக்கும் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யும் நடவடிக்கைகளும் தொடங்கிவிட்டன.

'ஜனாதிபதி கோத்தாபயவுக்கு குழந்தை மனம். கைதிகள் சிறைக்குள் வாடுவதைக் காணச் சகிக்க முடியாமல், கருணைப் பெருங்கடலாக மாறி, இப்படி கொலைக்குற்றவாளிகள், ஆயுதம் வைத்திருந்தவர்கள் எல்லோரையும் சிறைகளைத் திறந்து வெளியே அனுப்புகிறார் போலும்' என்று விடயம் தெரியாத எவரேனும் எண்ணக்கூடும். ஆனால் உண்மையில் தன்னுடைய அரசியல் இருப்புக்கு யாரெல்லாம் ஆதாயமாக இருப்பார்கள் என கோத்தாபய எண்ணுகிறாரோ அவர்களுக்கு மட்டும், என்னதான் படுகொலைகளைச் செய்தவர்களுக்கும் கூட, மன்னிப்பளித்து விடுவிக்கிறார். அப்பாவிகள் சிறைகளுக்குள் இருக்க வேண்டியதுதான்.

அப்படிப் பல வருடங்களாக, சிறைகளுக்குள் வாடும் தமிழ் அரசியல் கைதிகளையும் இப்போதைக்கு விடுவிக்கும் எண்ணம் இந்த அரசுக்கு துளியேனும் இல்லை. அதனால்தான் 'தமிழ் அரசியல் கைதிகள் என்ற எவருமே இல்லை' என்ற புளித்துப்போன வார்த்தைகளை மீண்டும் மீண்டும் அதே புளிப்போடும், திமிரோடும் அரசு வெளியே உமிழ்கின்றது. கொரோனா வந்து அவர்கள் துடிக்கும்போது கூட உரிய சிகிச்சைகள் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்று சிறைச்சாலைத் தகவல்கள் சொல்கின்றன. கொரோனாவால் செத்தாலும் பரவாயில்லை, ஆனால் தமிழ் அரசியல் கைதிகள் மீது சிறுதுளி கருணையைக் கூட காட்டமாட்டோம் என்று அரசு பிடிவாதம் பிடிக்கின்றது. உள்ளிருந்தான ஜனநாயகப் போராட்டங்களையும் முன்னெடுக்க முடியாத நிலை அரசியல் கைதிகளுக்கு. அப்படி ஏதும் போராட்டங்களை நடத்தினால், என்ன நடக்கும் என்பதை மஹர சிறைச்சாலையில் தெளிவாகவே அரசின் வேட்டையாடுதல் உணர்த்தியிருந்தது. எனவேதான் கொஞ்சம் மாற்றாக, தங்கள் உறவுகளை விடுவிக்கக் கோரி வடக்கு, கிழக்கில் நேற்று பரவலாக ஜனநாயக ரீதியான போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. இந்தக் கோரிக்கைக் குரல்கள் வழக்கம் போல, அரசின் செவிகளுக்கு ஏறாமல் போகலாம். ஆனால், ஜெனிவா அமர்வு நெருங்கும் சமயத்தில் தனக்கு எதிரான இப்படியான கலகக் குரல்கள் எழுவதை அதிகாரம் விரும்பாது. எனவே எப்படியாவது அதனைத் தற்காலிகமாகவேனும் நிறுத்தும் வழிவகைகளை ஆராயச் சாத்தியம் அதிகம்.
கொலைகாரர்களுக்கு பெருங்கடலாகக் கிடைக்கும் கோத்தா அரசின் கருணையின் ஒரு துளியை தமிழ் அரசியல் கைதிகள் மீது தெளித்து நல்லபிள்ளை என்று சர்வதேசத்தின் முன் பெயரெடுக்க அரசு நினைக்கலாம். அதற்காகவேனும் தமிழ் அரசியல் கைதிகள் குறித்த ஏதேனும் ஒரு நல்ல செய்தியை அரசு சொல்லிவிடாதா என்பதே போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்களினதும், அரசியல் கைதிகளின் உறவுகளினதும் நப்பாசை. அந்த நப்பாசை நிராசையாகி விடக் கூடாது என்பதே ஒவ்வொரு தமிழரினதும் வேண்டுதல்.

## இன்றைய கேலிச்சித்திரம்




நன்றி - அவந்த ஆட்டிகல

### ஒதுக்கப்படும் நிதிகள்
# மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்க செலவு செய்யவேண்டும்
### வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.6
"எதிர்வரும் ஆண்டுக்கென ஒதுக்கப்படும் நிதிகளை மத்தியிலோ, நகரத்திலோ அலங்காரத்துக்கு பயன்படுத்தாது அவை மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயங்களுக்கு மட்டுமே செலவு செய்யப்படவேண்டும்" என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ் தெரிவித்தார்.
வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட அனைத்துத் திணைக்களத் தலைவர்கள் மற்றும் துறைசார் செயலாளர்களுடனான இவ் வருடத்துக்கான ஆரம்ப கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
தற்போது இடமாற்றக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இங்கு முக்கியமாக வளங்கள், நகரத்தை மட்டும் மையமாக கொண்டிராது, கிராமப்புற மக்களின் தேவைப்பாடுகளையும் கருத்திற்கொண்டு வளப்பகிர்வு சீராக நடைபெற வேண்டும்.
பாடசாலைகள் என்பவை வெறும் கட்டடங்களால் மட்டும் அமைக்காது,மாணவர்களுக்கான அனைத்துத் தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யக்கூடிய நீர் மற்றும் மலசலகூட வசதி என்பவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும். உள்ளூராட்சி



மன்றங்களால் அமைக்கப்பட்டுள்ள சந்தைக் கட்டடங்களில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உரிய அடிப்படை வசதிகள் எவையும் காணப்படவில்லை. எனவே பெண்கள் அமைப்புகள் பெண்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய வகையில் செயற்படவேண்டும். என்றார். (ஐ)

## இந்திய மீனவர்களுக்கு மீண்டும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஜன.6
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட, இந்திய மீனவர்கள் 22 பேரையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது
கடந்த மாதம் காரைநகர் கடற்படையினரால் குறித்த மீனவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.
மீனவர்கள் தொடர்பான வழக்கு, ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் தொடர்ந்து மூன்று தவணைகளாக இடம்பெற்று வருகின்றது. நேற்றைய வழக்கு விசாரணை முடிவிலும் அவர்களுக்கான மறியல் நீடிக்கப்பட்டது. (க-25)

## ஆப்கானிஸ்தானுடன் இலங்கை இணையும்

ஆப்கானிஸ்தானுடனான இலங்கையின் உறவை வலுப்படுத்துவதற்கான திட்டத்துக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
இரு நாடுகளுக்கும் இடையில் அரசியல் ஆலோசனை பொறிமுறையை நிறுவுவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் திட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அதன் பிரகாரம், அரசியல், பாதுகாப்பு, பொருளாதார, கலாசார, கல்வி, சுகாதாரம், சமூக, தனிநபர் உறவுகள், மனிதவள மேம்பாட்டுத் துறைகள் மற்றும் பிற துறைகளை உள்ளடக்கிய இருதரப்பு உறவையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டது.
வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன இந்தத் தீர்மானத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்தார். (க-இ)

மாகாண சபை

# தேர்தலை நடத்தினால் அரசுக்குப் படுதோல்வி

## புலனாய்வுப் பிரிவு அதிர்ச்சி அறிக்கை

**கொழும்பு,ஜன.6**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, மாகாண சபைகளுக்கான தேர்தலைத் தற்போது நடத்தினால் அரசுக்கு மிகப் பெரிய தோல்வி ஏற்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது.**

புலனாய்வுப் பிரிவுகளால் அரச உயர்பீடத்துக்கு வழங்கப்பட்ட இரண்டு அறிக்கைகளிலேயே இந்தத் தகவல் உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டி, செங்கடகல பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்த அச்சத்தின் காரணமாகவே கோத்தாபய அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் ஒத்தி வைத்து வருகின்றது.

அரச புலனாய்வுத்துறை இரண்டு பகுதிகளாக குறித்த விடயம் குறித்து புலனாய்வு செய்திருக்கின்ற நிலையில் அதில் கோத்தாபய அரசின் படுதோல்வி நிச்சயமாக உறுதி செய்யப்பட்டது - என்றார். (ஐ-22)

## பூங்காவில் மரங்கள் அழிப்பு; அறிக்கை கோருகிறார் அமைச்சர்

குருநாகல், ஜன.6

குருநாகல் ரஜபிஹில்ல பூங்காவில் இருந்த பழமைவாய்ந்த 28 மரங்கள் வெட்டி அகற்றப்பட்டமை தொடர்பில் தமக்கு உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர, மத்திய சுற்றுச் சூழல் அதிகாரசபையின் தலைவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

குறித்த மரங்களை அகற்றுவதற்காக மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையால் அல்லது மாவட்ட அதிகாரிகளால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா? என்பது தொடர்பில் ஆராயுமாறும் அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். மேலும், கொவிட்-19 பரவல் நிலையை வனங்களை அழிப்பதற்காக சிலர் பயன்படுத்தி வருகின்றனர் என சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், உடனடியாக அதிகாரிகளை ஈடுபடுத்தி அது தொடர்பில் ஆராயுமாறும் பணிப்புரை விடுத்துள்ளார். (ந-இ)





யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வராக தெரிவு செய்யப்பட்ட வி.மணிவண்ணன், கொக்குவில் ஸ்ரீ சித்தி விநாயகர் (ஐயனார்) ஆலயத்தினரால் அண்மையில் கௌரவிக்கப்பட்டார். (ஐ)

## யானைகள் அட்டகாசம்; நெற்செய்கை பாதிப்பு

முல்லைத்தீவு, ஜன.6

துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கல்விளான் கிராமத்தின் வயல் நிலங்களுக்குள் நுழையும் யானைகள் நெற்பயிர்களை நாசம் செய்து வருகின்றன என அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கல்விளான் கிராமத்தில் 500 ஏக்கர் வயல் நிலத்தில் நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

காட்டுப்பகுதியிலிருந்து பாலியாற்றின் கரையூடாக வயல்நிலங்களுக்குள் கூட்டமாக நுழையும் யானைகள் பயிர்களை நாசம் செய்து வருகின்றன.

கடந்தகாலங்களில் காலபோக செய்கையின் போது யானைகளை விரட்டுவதற்காக விவசாயிகளுக்கு பிரதேச செயலகத்தால் ஆனை வெடிகள் வழங்கப்பட்டன. இம்முறை காலபோகசெய்கையின்போது ஆனைவெடிகள் வழங்கப்படவில்லை. இதனால் தொடர்சியாக யானைகளால் பாதிப்பை எதிர்நோக்கியே வருகின் றோம் என விவசாயிகள் கவலை தெரிவித்தனர். இதனை கட்டுப்படுத்துவதற்கு யானை வேலி அமைத்துத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-ரி1)

## கல் வீழ்ந்து வீடு சேதம்

ஹற்றன், ஜன. 6

சீரற்ற காலநிலையால் கினிகத்தேனை பிட்டவல கீகியனாகெதர கிராம பகுதியில் உள்ள குடியிருப்பொன்றில் மிகப்பெரும் கல் சரிந்து விழுந்துள்ளது. இதனால் வீடு பகுதியளவில் சேதமடைந்தது.

வீட்டிலிருந்தவர்கள் பாதுகாப்பாக அயலவர்களின் உதவியுடன் காப்பாற்றப்பட்டு தற்போது உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாக தங்கியுள்ளனர். இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ரி5-இ)

## கிளைக்குழு தேர்தல்

கொடிகாமம், ஜன. 6

கொடிகாமம் பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கும் பதினொரு கிளைகளுக்கு இடையில் கிளைக்குழு தேர்தல் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 11 கிளை நிலையங்களிலும் இடம்பெறும். (ரி5-159)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம்

## நாடாளுமன்றத்தின் ஊடாக நிர்ணயிக்கப்படவேண்டும்

### வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு

மலையகம்,ஜன.6

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச சம்பளத்தை நிர்ணயிப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் இருந்தும், நாடாளுமன்றத்தின் ஊடாக அது ஏன் முன்னெடுக்கப்படுவதில்லை என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார்.

"குறைந்தபட்ச வேதனங்கள்' (இந்திய தொழிலாளர்கள்) சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வேலைக்கு ஆள்களை சேர்க்கும் வயதெல்லையை 15 இல் இருந்து 16 ஆக அதிகரிப்பதற்காகவே மேற்படி சட்டத் திருத்தம் முன்வைக்கப்பட்டுள்ளது.குறித்த ஏற்பாட்டை வரவேற்றாலும் இச்சட்டம்நடைமுறைக்குஏற்ற வகையில் மாற்றியமைக்கப்படாமை தவறாகும்.

குறைந்தபட்ச வேதனத்தை நிர்ணயிப்பதற்கான சட்ட ஏற்பாடு இருந்தும், நடவடிக்கைகள் யாவும் இதுவரை மூடிமறைக்கப்பட்டே முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனவே, தோட்டத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச சம்பளத்தை நாடாளுமன்றமே இனி நிர்ணயிக்க வேண்டும் - என்றார். (ஐ-இ)

## கூட்டமைப்புக்குள் கருணாவா? அதற்குச் சாத்தியமே இல்லை!

### சி.வி.கே சிவஞானம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 6

வி.முரளிதரன் எனப்படும் கருணாவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைப்பது என்பது சாத்தியப்படாத விடயம் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த கருணா, 'நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட ஆர்வமாக உள்ளேன். தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுடன் எனக்கு நெருங்கிய தொடர்பு உள்ளது' என்று தெரிவித்திருந்தார். இந்த நிலையில் இது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சிவஞானம் கருணாவுடன் இணைந்து செயற்படுவது சாத்தியப்படாத விடயம் என்று பதிலடி கொடுத்துள்ளார்.

கருணா கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட விரும்புகின்றேன் என்று தெரிவித்தாரே தவிர, கூட்டமைப்பு அவரை இணைத்துக் கொள்ளுவது தொடர்பாக எந்தவொரு தீர்மானமும் எடுக்கவில்லை. அவரை கூட்டமைப்புடன் இணைப்பது என்பது சாத்தியப்படாத ஒரு விடயம் - என்றார். (ம-இ)



## பிணியாய்வின் பின்பே கொரோனாப் பானம்

கொழும்பு, ஜன.6
கொவிட் தொற்றுக்காக சுதேச மருத்துவர்கள் தயாரித்த எந்தவொரு ஔடதமும் பிணியாய்வுப் பரிசோதனைகளின் பின்னரே நோயாளிகளுக்கு வழங்கப்படும் என இலங்கை ஆயுள்வேத ஔடத கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.
கொவிட் தடுப்பு மருந்து வழங்கியபோதும், சுதேச மருத்துவம் தொடர்பான தேசிய குழுவின் பரிந்துரைகளுக்கு அமையவே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
நோய்த் தடுப்புச் சக்தியை அதிகரிப்பதற்காக கூடுதலான பாரம்பரிய மருந்துகள் பயன்படுத்தப்பட்டன. இதனால் நோயை வேகமாக குணமாக்கி, கொரோனா மரணங்களை குறைந்த மட்டத்தில் பேண முடிந்தது என கூட்டுத்தாபனத்தின் தலைவி சாகலா அபேவிக்ரம தெரிவித்தார். (வ-இ)

## 23ஆம் திகதி விமான நிலையங்கள் முழுமையாகத் திறப்பு

### அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 6
சுற்றுலாப் பயணிகளுக்காகவும், வணிகத் தேவைகளுக்காகவும் ஜனவரி 23ஆம் திகதி முதல் விமான நிலையங்கள் முழுமையாகத் திறக்கப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா தாக்கத்தால் கடந்த வருடம் மார்ச் 19ஆம் திகதி விமான நிலையங்கள் மூடப்பட்டன. எனினும் கடந்த ஆண்டு ஜூன் மாதம் சுற்றுலாத் துறையை மீள ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் கொரோனா 3ஆவது அலையால் அதனை செயற்படுத்த முடியாமல்போனது.
டிசெம்பரில் பேச்சுக்களை ஆரம்பித்து இவ்வாண்டு ஜனவரியில் சுற்றுலாப்பயணிகளை நாட்டுக்குள் அனுமதிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. சுற்றுலாத்துறைக்கு சிறந்த வரவேற்பும் இருக்கின்றது.
அத்துறையில் உள்ளவர்களின் நலனையும் கருதி விரைவில் சுற்றுலாத்துறையை மீள ஆரம்பிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது. என்றார். இதேவேளை உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு ஏற்கனவே வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.44)

## குற்றச்சாட்டுக்களால் அரசை வீழ்த்தமுடியாது

*கூறுகிறார் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த*

கொழும்பு, ஜன.6
அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் நோக்கில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களால் அரசாங்கத்தை ஒருபோதும் வீழ்த்த முடியாது எனப் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பகல்வி பாடசாலை அடிப்படை வசதிகள் மற்றும் கல்விச் சேவை இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது 7.3 சதவீதமாகக் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சி கடந்த 5 வருடங்களில் 2.1 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. தற்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியில் கிராமிய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த உள்நாட்டில் முன்னெடுக்கும் செயற்பாடுகளை மக்கள் விடுதலை முன்னணி விமர்சித்து வருகின்றது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைத்துவம் வெட்கப்பட வேண்டும் .
குறைந்த வருமானம் பெறும் 2 லட்சம் குடும்பங்களைத் தெரிவுசெய்து அக் குடும்பங்களிலுள்ள பெண்கள் சுயதொழில் செய்வதற்கு தேவையான உதவிகள் வழங்கப்படவுள்ளன. கிராமியச் சந்தைகளில் 25 ஆயிரம் புதிய தொழில் வாய்ப்புகள் விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளன என்றார். (ந-இ)

## உயர்தரப் பெறுபேறு மார்ச் மாத இறுதியில்!

கொழும்பு, ஜன.6
கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை மார்ச் மாத இறுதியிலோ அல்லது ஏப்ரல் மாத முற்பகுதியிலோ வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
பல்கலைக்கழக அனுமதிக்கான தேவைகளை குறுகிய காலத்துக்குள் நிறைவேற்றி, காலம் தாழ்த்தாது மாணவர் அடையக்கூடிய இழப்புக்கள் சீர்செய்யப்படவுள்ளது.
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மார்ச் மாதம் வரை பிற்போடப்பட்டுள்ளது. இதன் காரணமாக மாணவர்களுக்கு எவ்வித காலதாமதமும் ஏற்படாத வகையில் பெறுபேறுகள் விரைவாக வெளியிடப்படவுள்ளது. உயர்தர வகுப்புக்கள் ஜூலை மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன - என்றார். (ற-இ)

## சுற்றுலாவிகள் விடயத்தில் மிகுந்த அவதானம் தேவை

*அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.6
யால தேசிய பூங்காவுக்கு உக்ரைனிய சுற்றுலாப் பயணிகள் சென்றமை போன்றதொரு நிலைமை மீண்டும் ஏற்படாமல் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.
சுற்றுலாப் பயணிகளுக்கு நாட்டைத் திறப்பதற்கான பைலட் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்கள் முறையாக செயற்படுத்தப்படவேண்டும்.
இந்த விடயத்தில் சுற்றுலா மேம்பாட்டு ஆணையம் உள்ளிட்ட தொடர்புடைய நிறுவனங்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

## கொரோனா தொடர்பில் முடிவெடுக்க இயலாது

*மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.6
கொரோனா பாதிப்புத் தொடர்பில் உடனடியாக எந்த முடிவுக்கும் வரமுடியாது என பொதுச்சுகாதார சேவையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.
அடுத்த சில நாள்களுக்கு நிலைமையை உன்னிப்பாக அவதானித்தே பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவடைகின்றதா என்பது தொடர்பில் முடிவெடுக்க முடியும்.
பண்டிகைக் காலத்தில் பி.சி.ஆர் சோதனைகளின் எண்ணிக்கையை குறைக்க வேண்டியிருந்தது. கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருந்தோம். மேலும் தொடர்ச்சியாக பணியாற்றிய சுகாதார பணியாளர்களுக்கு சிறிது ஓய்வை வழங்க வேண்டியிருந்தது.
தற்போது மீண்டும் பி.சி.ஆர். சோதனையின் அளவை அதிகரித்தே ஒரு முடிவுக்கு வர முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## கடமையேற்பு

கொழும்பு, ஜன.6
கைத்தொழில் அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட அனுஷ பெல்பிட்ட நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.
சிரேஷ்ட நிர்வாக அதிகாரியான இவர் இதற்கு முன்னர் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு மற்றும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## எரிப்பதா? புதைப்பதா? தீர்மானம் வேண்டும்

*அரசைச் சாடுகிறார் கரு*

கொழும்பு, ஜன.6
கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களைத் தகனம் செய்வதா? அல்லது அடக்கம் செய்வதா? என்ற பிரச்சினைக்கு அரசாங்கம் உடனடியாகத் தீர்வை வழங்கவேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தனது ருவிட்டர் பக்கத்தில் சுட்டிக்காட்டினார்.
கொரோனாவால் உயிரிழப்போருக்கான இறுதிச் சடங்குகளை நடத்தும் முறை தொடர்பில் தோன்றியிருக்கும் பிரச்சினைக்கு இறுதித் தீர்மானமொன்று எட்டப்பட வேண்டும்.
இப் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்காது, நீண்ட நாள்களாக இழுத்தடிப்புச் செய்வதென்பது அரசாங்கத்தின் இயலாத்தன்மையையே எடுத்தியம்புகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-இ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.ஜன.6

யாழ்ப்பாண மாவட்ட திருமண மண்டப உரிமையாளர்கள் மற்றும் முகாமையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு திவ்விய மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது .

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக திருமண மண்டபங்களை எதிர்வரும் காலத்தில் நடத்திச் செல்வது தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் திருமண மண்டபங்களின் உரிமையாளர்கள் மற்றும் முகாமையாளர்களை இதில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## தகைமைகாண் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி.ஜன.6

வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) மற்றும் படவரைஞர் பதவிகளில் பயிற்சித் தரங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களை தொழில்நுட்பவியல் சேவையின் தரம்111 பதவிக்கு நியமனம் வழங்குவதற்கான தகைமைகாண் பரீட்சை பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை ஜனவரி 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## போதையில் சாரத்தியம் 7 பேருக்கு தண்டம்

சாவகச்சேரி,ஜன. 6

போதையில் வாகனம் செலுத்திய 7 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் மொத்தமாக ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. சாரதிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து மதுபோதையில் வாகனம் செலுத்திய ஐந்து பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும், மதுபோதையில் வாகன வரிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 27 ஆயிரத்து 500 ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது.(ஐ-9)

## காத்தான்குடி பகுதி தனிமைப்படுத்தலில்

மட்டக்களப்பு, ஜன. 6

காத்தான்குடி பகுதி எதிர்வரும் 15 ஆம் திகதிவரை தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்படும் என மட்டக்களப்பு மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் அன்டிஜென் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகளில் தொற்றாளர்கள் இனங் காணப்படுகின்றனர். இதனாலேயே இந்தத் தீர்மானம் முன்னெடுக்கப்பட்டது என மாவட்ட செயலர் தெரிவித்தார். (ரி5)

# அரச உத்தியோகத்தருக்கென அமைத்த 50 வீடுகள் அழிவடையும் நிலையில்

### புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் விசனம்



**முல்லைத்தீவு, ஜன. 6**

**முல்லைத்தீவு பணிக்கன்குளத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கென அமைக்கப்பட்ட 50 வீடுகளில் எந்தவொரு அரச உத்தியோகத்தரும் குடியேறவில்லை. இதனால் குறித்த வீடுகளில் பாம்புப் புற்றுகள் உருவாகி வீடுகள் சேதமடைந்து அழிந்து கொண்டிருக்கின்றன என புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் மு.முகுந்தகஜன் தெரிவித்தார்.**

குறித்த வீடுகளை வீடுகள் அற்ற குடும்பங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும், முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

பல குடும்பங்கள் பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டபோதும் இதுவரை எந்தக் குடும்பத்தையும் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலகம் மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் குறித்த வீடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்து வீடுகள் அற்ற குடும்பங்களுக்கு அந்த வீடுகளை வழங்க வேண்டும் என முகுந்தகஜன் கோரிக்கை விடுத்தார். (ரி5-ரி2)



*பொதுப் பெயர்களைப் பயன்படுத்தி*

## போலியாக பணம் வசூலிப்பு: மடக்கிப் பிடிக்கப்பட்ட நபர்

கரவெட்டி,ஜன.6

பொது அமைப்புக்கள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றின் பெயர்களைப் பயன்படுத்தி போலியாக பணம் வசூலித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:

கடந்த சில நாள்களாக கரவெட்டி பிரதேச கிராம அலுவலர் பிரிவுகளில் ஒரு சிலர் பாடசாலைக்கு நிதி உதவி,பிரதேச செயலக வெள்ள இடர்பாட்டுக்கு நிதி உதவி எனக் கூறி வீடு வீடாகச் சென்று கொப்பிகளில் 5 ஆயிரம், ஆயிரம் ரூபா எழுதப்பட்ட கையொப்பங்களைக் காட்டி நூதனமான முறையில் பணம் சேகரித்து வந்துள்ளனர்.

இதனை அறிந்த கிராம அலுவலர்கள், பொலிஸார், பிரதேச செயலகத்தினர் எனப் பலரும் இவர்களைக் பிடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். இந்நிலையில் நேற்றுமுன்தினம் கரவெட்டி பகுதியில் இவ்வாறு பண மோசடியில் ஈடுபட்டிருந்தவேளை மக்களால் நபர் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

அவ்விடத்துக்கு விரைந்த பிரதேச செயலர் தயாரூபன்,கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த குறித்த நபரையும் பெருந்தொகைப் பணத்தையும் மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ஐ-26)

## குமார் பொன்னம்பலத்துக்கு மட்டக்களப்பில் நினைவேந்தல்

மட்டக்களப்பு,ஜன.6

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் முன்னாள் தலைவர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 21 ஆம் ஆண்டு நினைவேந்தல் மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் உருவப்படத்துக்கு அகவிளக்கேற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஞாபகார்த்த உரைகள் இடம்பெற்றன. (க-இ)



*பூநகரி தெலிகரை 25 வீட்டுத் திட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு நேற்று முன்தினம் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. காங்கேசன்துறை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகமும் ,வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கமும் இணைந்து இந்த உதவியை வழங்கின. (ஐ-9)*

## பொங்கல் வியாபாரத்துக்கு சந்தைகளைத் திறக்குக

யாழ்ப்பாணம்.ஜன.6

பொங்கல் பண்டிகைக் காலத்தில் வியாபாரம் செய்வதற்காக எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதிவரை தற்காலிகமாக சந்தைகளைத் திறப்பதற்கு, உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொரோனாத் தொற்று அச்சம் காரணமாக வடக்கு மாகாணத்தில் சந்தைகள் மூடப்பட்டதால், வியாபாரிகள் வெவ்வேறு இடங்களில் பெரும் சிரமங்களின் மத்தியில் தமது வியாபார நடவடிக்கைககளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் வியாபார நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. பொங்கலுக்குரிய பொருள்களை ஒரே இடத்தில் வாங்குவதற்கு சந்தைகள் அவசியம் என்பதால், வடக்கில் சந்தைகளை தற்காலிகமாக திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-9)

# ஜனவரி மாத ராசி பலன்கள்







எதையும் ஆழமாக யோசித்து திறமையுடன் செய்து முடிக்கும் கடக ராசியினரே!

நீங்கள் குடும்பத்தினரின் மீது அதிக பாசம் வைத்திருப்பவர்கள். இந்த மாதம் பணவரத்து திருப்திகரமாக இருக்கும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை வெற்றிகரமாகச் செய்வீர்கள். ஆனால் தாமதமான பலனே கிடைக்கும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக வந்து சேரும். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும்போது கவனமாக இருப்பது நல்லது. தைரியம் அதிகரிக்கும்.

தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு வேகமாக இல்லாவிட்டாலும் நிதானமாக இருக்கும். பணவரவு உண்டு. வாடிக்கையாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. நீண்ட நாட்களாக தொழிலில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதையும் ஆலோசித்து செயல்படுவது நன்மை தரும். மேல் அதிகாரிகள் கூறுவதற்கு மாற்றுக் கருத்துகளை கூறாமல் இருப்பது நல்லது. சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

குடும்பத்தில் கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் நிதானமாகப் பேசுவது குடும்ப அமைதியைத் தரும். நண்பர்கள், உறவினர்கள் விலகிச் செல்வதுபோல் இருக்கும். விட்டுப் பிடிப்பது நல்லது. குழந்தைகளின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள்.

**பெண்களுக்கு** எதிர்பார்த்த உதவிகள் கிடைக்க பெறுவீர்கள். மாற்றுக் கருத்துக்களை மற்றவர்களிடம் கூறாமல் இருப்பது நன்மை தரும்.

**கலைத்துறையினருக்கு** நீங்கள் மற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதில் தயங்க மாட்டீர்கள். பேச்சுத் திறமை அதிகரிக்கும். எதிர்பாலினத்தவருடன் பழகும்போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் வீண் அலைச்சல் குறையும்.

**அரசியல் துறையினருக்கு** வீண் அலைச்சல் வேலைப் பளு இருக்கும். மனம் மகிழும் காரியங்கள் நடக்கும். பேச்சுத் திறமையால் காரியங்களை சாதகமாக செய்து முடிப்பீர்கள். பயணங்கள் செல்ல நேரலாம்.

**மாணவர்களுக்கு** எதையும் ஒருமுறைக்கு இருமுறை ஆலோசித்து செய்வது நன்மை தரும். கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**புனர் பூசம் 4ம் பாதம்:**
இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனத்துடன் பணியாற்றுவது நல்லது. புதிய வேலைக்கு செய்யும் முயற்சிகள் பலன் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த பிரச்சினைகள் குறையும். குழந்தைகளின் எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். விருந்தினர் வருகை இருக்கும். எந்த ஒரு முடிவையும் எடுக்கும்போது ஒருமுறைக்கு பலமுறை யோசிப்பது நல்லது. மற்றவர்களிடம் பகைமை பாராட்டுவதைத் தவிர்ப்பது நல்லது.

**பூசம்**: இந்த மாதம் மாணவர்கள் கல்வி தொடர்பான விஷயங்களில் முடிவு எடுக்கும் போது தீர ஆலோசித்துச் செயல்படுவது நல்லது. புதிய முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம். எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். புத்திசாதுர்யத்தால் எதையும் செய்து முடிக்க முடியும். அனுபவபூர்வமான அறிவுத்திறன் கை கொடுக்கும். பண வரத்து தாமதப்படும். மற்றவர்களுடன் வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நன்மைதரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும்.

**ஆயில்யம்**: இந்த மாதம் பணவரத்து தாமதப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களுடன் கவனமாகப் பழகுவது நல்லது. அடுத்தவரின் உதவி கிடைக்கும். புதிய பொறுப்புகள் ஏற்க வேண்டி இருக்கும். செயல் திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் திடீர் பிரச்சினை தலை தூக்கும். மிகவும் கவனமாக கையாண்டால் அது தீரும். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படலாம்.

## பொருளாதார வளர்ச்சி விகிதம் 3.9 வீதத்தால் குறைவு

கொழும்பு, ஜன.6

2020 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 3.9 வீதத்தால் குறைவடைந் துள்ளது என மத்திய வங்கி ஆளுநர் லக்ஷ்மனன் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுப் பரவலின் தாக்கம் சுதந்திரத்திற்குப் பின்ன ரான இலங்கையின் பொருளா தாரத்தை வெகுவாகப் பாதித்துள்ளது என சுட்டிக்காட்டியுள்ள அவர், 2020 ஆம் ஆண்டின் 2 ஆவது காலாண்டுப் பகுதியிலே நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமடைந்ததுடன், 3 ஆவது காலண்டில் ஓரளவு முன்னேற்றம் காணப்படுகிறது எனவும் குறிப் பிட்டுள்ளார்.

அத்துடன், 2021 ஆம் ஆண்டு முழுவதும் ஒற்றை இலக்க வட்டி விகிதத்தை நடைமுறைப்படுத்த மத்திய வங்கி எதிர்பார்த்துள்ளது எனவும், சவாலான உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் பொருளாதாரத்துக்கு போதுமான உத்வேகத்தை வழங்க நாணய மற்றும் நிதி தலையீடுகள் மூலம் தொடர்ச்சியான ஆதரவு அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

## சிறையின் நெருக்கடியே கலவரத்துக்குக் காரணம்

### மஹர கலவரம் தொடர்பான குழுவின் அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.6

மஹர சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற கைதிகளுக்கு இடையேயான கலவரத்துக்கு சிறைச்சாலையில் காணப்பட்ட நெருக்கடி நிலையே காரணம் என கலவரம் தொடர்பில் ஆராய்ந்த ஐவர் அடங்கிய குழுவின் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட குறித்த அறிக்கையில் இது தொடர்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

100 கைதிகள் மாத்திரம் இருக்க வேண்டிய சிறை விடுதியில் 300க்கும் மேற்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டிருந்துள்ளனர். சுவையான உணவுகள் வழங்கப்பட வேண்டும், நீதிமன்றால் பிணை வழங்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்,

பிணை வழங்காதவர்களுக்கு துரிதமாக பிணை வழங்க வேண்டும்,19 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க வேண்டும், அனைத்துக் கைதிகளுக்கும் பி.சீ.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகள் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகளால் முன்வைக்கப்பட்டிருந்தன.

கைதிகள் சுதந்திரமாக வசிப்பதற்கான அனுமதி வழங்கப்படாமையே இந்த அமைதியின்மைக்குக் காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை தயார் செய்த குறித்த குழு, சிறைச்சாலை அதிகாரிகள், கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் கைதிகள் உள்ளிட்ட 40 பேரிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளது.

சிறைச்சாலை அதிகாரிகளில் பற்றாக்குறை நிலவியமையால் கைதிகளுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை வழங்கமுடியாமல் போயுள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## கோப்குழு முன்னிலையில் ஐந்து அரச நிறுவனங்கள்!!

கொழும்பு, ஜன.6

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு இந்த மாதம் ஐந்து அரச நிறுவனங்களின் கணக்காய்வு நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்யவுள்ளது என்று அதன் தலைவர் சரித ஹேரத் தெரிவித்தார். அந்தவகையில், மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவை உட்பட்ட நிறுவனங்களின் கணக்காய்வு நடவடிக்கைகளே இவ்வாறு மேற்கொள்ளப்படவுள்ளன. கொவிட்19 சுகாதார ஒழுங்கு விதிகளுக்கு அமைய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றி இந்த மாதம் 6, 8, 19, 21 மற்றும் 22 ஆகிய தினங்களில் கோப் குழு கூடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். அதன்படி, ஜனவரி 6 ஆம் திகதி கோப் குழு முன்னிலையில் சுயாதீன தொலைக் காட்சி சேவையின் அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஜனவரி 8 ஆம் திகதி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியத்தின் முதலீட்டு முகாமைத்துவம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கையும், ஜனவரி 19 ஆம் திகதி இலங்கையில் பெற்றோலியத்தை சேமித்து வைத்தல் மற்றும் விநியோகித்தல் பற்றிய கணக்காய்வு அறிக்கையும், ஜனவரி 21 ஆம் திகதி தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பிலும், ஜனவரி 22 ஆம் திகதி வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையின் தற்போதைய நிலைமை பற்றிய விசேட கணக்காய்வு அறிக்கையும் இதன் போது பரிசீலனை செய்யப்படவுள்ளன. (ற-இ)

# மைத்திரி தரப்புக்கு பகிரங்க அழைப்பு!

கொழும்பு, ஜன.6
ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட முன்வருமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் அழைப்பு விடுத்துள்ளார்.
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் தேர்தலின் போதும் வேட்டையாடப்பட்டனர்.
தேர்தலின் பின்னரும் அவர்கள் வேட்டையாடப்பட்டனர். எனவே அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதே மரியாதையைக் கொடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.
இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியுடன் எதிர்கால தேர்தலில் இணைந்து செயற்படும் நோக்கில், அந்தக் கட்சியுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் துணைத் தலைவர் ருவன் விஜயவர்த்தன அண்மையில் தெரிவித்திருந்தார்.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான உறவில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது என அந்தக் கட்சியை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ற-இ)

# ரூ. 2,000 நாணயத்தாள் மீண்டும் புழக்கத்துக்கு வரும்

கொழும்பு, ஜன. 6
இலங்கையில் 2 ஆயிரம் ரூபா நாண யத்தாள் மீண்டும் அச்சிடப்படவுள்ளன என மத்திய வங்கியின் ஆளுநர் டபிள்யூ.டி.லக்ஷமன் தெரிவித்துள்ளார். மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம் சங்களை கருத்திற்கொண்டு 2 ஆயிரம் ரூபா நாணயத்தாள்கள் அச்சிடப்படவுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

# பொலிஸ் நிலையங்களை தரப்படுத்தும் திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஜன.6
அனைத்துப் பொலிஸ் நிலையங்களையும் தரப் படுத்தும் வேலைத்திட்டங்கள் ஆரம்பமாகவுள்ளன எனப் பொலிஸ் ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திருமதி ரேணுகா ஜயசுந்தர தெரிவித்தார்.
இதற்குரிய முன்னோடித் திட்டம் களுத்துறை மற்றும் பாணந்துறை பிரதேசங்களில் நடைமுறையாகும் எனவும் நாட்டில் உள்ள 494 பொலிஸ் பிரிவுகள் சார்ந்த எல்லைகளை நிர்ணயிப்பதில் எழுந்துள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பது தரப்படுத்தலின் நோக்கமாகும் எனவும் அவர் தெரிவித்தார். (ச)

# இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் அரச நிறுவனங்கள் இல்லை

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.6**
**அரச நிறுவனங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ண தெரிவித்துள்ளதாவது.
வாகனச்சாரதிகள் அனுமதிப்பத்திரத்தை அச்சிடும் நடவடிக்கைகளை இராணுவம் மேற்கொள்வது ஒரு தற்காலிக நடவடிக்கை. அமைச்சரவையின் அனுமதியுடனேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படு கின்றது. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஏனைய நடவடிக்கைகளை திணைக்களமே முன்னெடுக்கின்றது. அதில் எந்த மாற்றமும் இல்லை.
இது அரசாங்கத்தின் நிரந்தரமான ஒரு முயற்சியில்லை. இராணுவத்துக்கு ஏனைய முக்கியமான பணிகள் உள்ளன. தேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அவர்களைப் பயன்படுத்துவோம் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# சுற்றுலாப் பயணிகளுக்கு விசேட சலுகை இல்லை

*மருத்துவ அதிகாரிகள் சங்கம் உறுதி*

கொழும்பு, ஜன.6
சுற்றுலாப் பயணிகளுக்கு விசேட சலுகைகளை வழங்க முடியாது என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் மருத்துவர் சமந்த ஆனந்த தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
கொரோனாப் பரவல் வேகமெடுத்துள்ள நிலையில் அரசாங்க அதிகாரிகள், தனியார் துறையினர், சுற்றுலாப் பயணிகள் என ஒவ்வொரு தரப்பினருக்கும் தனித்தனியான சட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடாது.
சுகாதார விதிமுறை கள் அனைவருக்கும் ஒரே விதமாகவே இருக்க வேண்டும். சுகாதார விதிமுறைகளை வகுக்க வேண்டிய கடப்பாடு சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் பொறுப்பாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)



புத்தாண்டில் வடக்கு மாகாணத்துக்குட்பட்ட அனைத்து அரச அலு வலகங்களும் சேவைகளை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப நிகழ்வு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், மாகாண சபை அவை தலைவர் சி.வி.கே. சிவஞானம், யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ற-7)

# அடக்கம் செய்வது தொடர்பில் அரசின் நிலைப்பாடு விரைவில்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜன.6
கொரோனாவால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பான விடயத்தில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை விரைவில் அறிவிக்கவுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அடக்கம் தொடர்பான நிபுணர் குழுவின் அறிக்கை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
இதனையடுத்து இந்த விவகாரத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மிக விரைவில் சுகாதார அமைச்சர் அறிவிக்க உள்ளார் என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் இயக்குநர் மருத்துவ கலாநிதி பாலித கருணாபெம தெரிவித்தார். (வ-இ)

# தோட்டத் தொழிலாளர்கள் சிறுதோட்ட உரிமையாளர்களாக்கப்பட வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 6
மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள், சிறுதோட்ட உரிமையாளர்களாக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 'குறைந்தபட்ச வேதனங்கள்' திருத்தச் சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களும் இலங்கையர்களே. அவர்கள் இந்திய தொழிலாளர்கள் என சட்டவரைவில் குறிப்பிடப்பட்டுள் ளமை தவறாகும்.
பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்ற உறுதிமொழி வழங்கப்பட்டது. அது இன்னமும் நிறைவேற்றப்பட வில்லை. தற்போது 750 ரூபாவை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதனை ஏற்க முடியாது. அடிப்படை நாள் சம்பளமாக அவர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யவேண்டும்.
சட்டத்தை திருத்துவதைவிட பெருந்தோட்ட மக்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்தும் விதத்திலான புதிய சட்டம் அவசியம். அதில் அடிப்படை சம்பளமும் உரிய வகையில் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதேபோல் பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதற்கான வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவேண்டும், என்றார். (ஒ,44)



"நிறைவான கிராமம்" என்ற திட்டத்தின் கீழ் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இளையோருக்கான தொழிற்பயிற்சி நிலையக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கொடிகாமம் மத்தி கிராம அலுவலர் பிரிவில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ஐ-159)

# மோ.சைக்கிளில் வந்தவரால் 'அசிட்' வீச்சு

கொழும்பு, ஜன.6
காலி, தலாபிட்டி பகுதியில் ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த இரு பெண்கள் மற்றும் ஆண் ஒருவர் மீது மோட்டார் சைக்கிளில் வந்தவரால் 'அசிட்' வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதிப்புக்கு இலக்கான மூவரும் காலி கராம்பிட்டி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர் எனவும் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கொரோனாவை பரப்பவே அரசாங்கம் முன்னிற்கிறது

சம்பிக்க குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜன.6**
**கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசிகளைத் தமது மக்களுக்கு வழங்குவதற்காக, சுகாதார ஸ்தாபனத்தின் விதிமுறைகளுக்கு அமைய உலகில் பல நாடுகள் செயற்பட்டு வருகின்றன .**

ஆனால், எமது நாட்டில் கொரோனாவை மென்மேலும் பரப்பும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மேலும், கொரோனாவுக்கு முகம் கொடுத்துக்கொண்டிருக்கும் உக்ரைனிலிருந்து சுற்றுலாப் பயணிகளை அழைத்து வந்து, எமது சுற்றுலாடல் துறையை மேம்படுத்துவதாகத் தெரிவிப்பதானது, நகைப்புக்குரிய விடயமாகும். வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளில், கொரோனாத் தொற்றாளர்களும் உள்ளனர். தற்போதைய அரசாங்கம், சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதாகத் தெரிவித்து, அரச நிதியை பெருமளவில் துஷ்பிரயோகப்படுத்துகின்றது-என்றார். (ற-இ)




# முகத்துவார பகுதிகள் தனிமைப்படுத்தல்

கொழும்பு, ஜன.6
கொழும்பு - முகத்துவாரம் பொலிஸ் பிரிவின் கீழுள்ள இரண்டு பகுதிகள் நேற்றுக் காலை 5 மணி முதல் உடன் நடைமுறைக்குவரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள் ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இதன்படி, முகத்துவாரம் பொலிஸ் பிரிவின் புனித அன்ரூஸ் வீதி, அன்ரூஸ் மேல் மற்றும் கீழ் வீதிகள் என்பவை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)


# ஸ்ரீலங்கன் கேட்டரிங்கில் 72 ஊழியருக்கு தொற்று

கொழும்பு, ஜன.6
ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கேட்டரிங் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களில் 72 பேருக்கு இதுவரை கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கம்பஹா மாவட்ட சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளர் மருத்துவர் மிகராபா தெரிவித்தார் (வ-இ)

## எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்




கொவிட்-19 தொற்றால் இறப்போரின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதிக்கக்கூடாது என எதிர்ப்பு தெரிவித்து ஜயசிறி சிங்களே அமைப்பு நேற்றுமுன்தினம் காலிமுகத்திடலில் திரிபுபடுத்தப்பட்ட தேசிய கொடியுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது... (ச)



# ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி சிரியாவில்

நாட்டில் பயங்கரவாதத்தைப் பரப்ப முயற்சி என குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.6
ஐ.எஸ்.ஐ அமைப்பின் முகவர் ஒருவர் இலங்கையில் பயங்கரவாதத்தைப் பரப்ப முயற்சித்து வருகிறார் என புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.
கண்டியைச் சேர்ந்த இந்த நபர், தற்போது சிரியாவில் வசித்து வருகிறார். இவர் ஆறு வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இருந்து சிரியாவுக்கு சென்று ஐ.எஸ்.ஐ அமைப்பினருடன் இணைந்து ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றவர். ஐ.எஸ். அமைப்பு இவருக்கு தனது இயக்கப் பெயர் ஒன்றைச் சூட்டியுள்ளது. இந்த நபருடன் தொடர்பில் இருக்கும் சுமார் 100 பேர் தொடர்பாக தகவல்களும் கிடைத்துள்ளன என புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ந)

# கல்முனையில் மேலும் 4 தொற்று

கொழும்பு, ஜன.6
கல்முனை சுகாதார பிராந்தியத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதியில் நேற்று அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பரிசோதனைகளின் முடிவாக நால்வருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் நால்வரும் மத்திய முகாம் நகரப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# 'மாஸ்க்' அணியாதோர் இனிக் கவனம்

கொழும்பு, ஜன. 6
சுகாதார வழிகாட்டல்களைக் கணக்கில் கொள்ளாது, முகக் கவசம் அணியாமல் நடமாடுவோரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் நேற்று முதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.
முகக் கவசம் அணியாதவர்கள் கைது செய்யப்படுமிடத்து, அவர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு மேலதிகமாக, அவ்வாறானவர்கள் கட்டாய பி.சி.ஆர். சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவர் என்று பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கூறினார். (ஒ.இ)

# அடக்கமா? தகனமா? என்பது தேசிய பிரச்சினை இல்லை

கூறுகிறார் பெரமுனவின் பொதுச்செயலாளர்

கொழும்பு, ஜன.6
கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்வதா அல்லது அடக்கம் செய்வதா என்ற விவகாரம் இலங்கையின் தேசிய பிரச்சினையில்லை பொதுஜனபெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழு இது தொடர்பான தீர்மானத்தை எடுக்கும். கொரோனா வைரஸ் தொடர்பாக முடிவெடுப்பதற்கான அதிகாரம் வேறு எந்த குழுவுக்கும் இல்லை. உடல்கள் தொடர்பான விவகாரம் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது சில குழுக்கள் இதனை தேசிய பிரச்சினையாக மாற்ற முயல்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு மருத்துவரை நியமித்து உதவுக

## கோரிக்கை விடுக்கின்றன பிரதேச பொது அமைப்புகள்

**முல்லைத்தீவு, ஜன.6**

**முல்லைத்தீவு, மாந்தை கிழக்கின் நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்குமாறு இப்பகுதி பொது அமைப்புகள் முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.**

ஐயன்கன்குளம் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியராக நிய மிக்கப்பட்டவரே நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலையில் நாள்தோறும் அரை நாள் கடமையில் உள்ளார். ஏனைய நேரங்களில் நோயாளர்கள் மல்லாவி மற்றும் மாங்குளம் ஆதார வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டி உள்ளது. ஊசி போடுவதற்குக் கூட நட்டாங்கண்டல் வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்கள் இல்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களைக் கொண்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் நட்டாங்கண்டல் வைத்தியசாலையை தமது வைத்திய தேவைகளுக்கு நம்பி 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ள நிலையில் இரவு வேளைகளில் பாம்புக்கடி, விபத்துகள், விலங்குகளின் தாக்குதல்கள் போன்ற ஆபத்துக்களை எதிர்கொள்கின்ற மக்களை உயிராபத்தான நிலையில் மல்லாவி மற்றும் மாங்குளம் ஆதார வைத்திய சாலைகளுக்கே கொண்டுசெல்ல வேண்டிய நிலையில் மாந்தை கிழக்கு மக்கள் நெருக்கடிகளுடன் வாழ்கின்றனர். கிராம மக்கள் எதிர்கொள்ளும் சுகாதார நெருக்கடிக்கு முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தீர்வுகள் வழங்க வேண்டும் என பொது அமைப்புகள் மேலும் வலியுறுத்தி உள்ளன. (ந-ரி2)

## சிவதீட்சை

சாவகச்சேரி,ஜன.6

சாவகச்சேரி கெருடாவில் ஞானவீரபத்திரர் கோவில் நிர்வாகத்தினரால், தைப் பூசத்தன்று சிவதீட்சை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. கோவிலில் சிவதீட்சை பெற விரும்பும் அடியார்கள் ,மாணவர்கள் கோவில் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)



ஐ ரோட் திட்டத்தில் யாழ்.மாநகர எல்லைக்குள் புனரமைப்பு செய்யப்படவுள்ள 17 வீதிகளின் வேலைதிட்டங்களை விரைவுபடுத்துவது தொடர்பான சந்திப்பு முதல்வர் அலுவலகத்தில் இடம்பெற்றது. சந்திப்பில் யாழ்.மாநகர முதல்வர் மற்றும் வட மாகாண ஐ ரோட் திட்டப் பணிப்பாளர், மாநகர ஆணையாளர் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். (க-26)

# தகனத்தைப் பரிந்துரைக்க குழு நியமிக்கப்படவில்லை

கொழும்பு,ஜன.6

கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்கள் தொடர்பாக ஆராய்வதற்கு, அரசு எந்தக் குழுவையும் நியமிக்கவில்லை என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வதா அடக்கம் செய்வதா என்பதை ஆராய்வதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொவிட்டைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் எப்போதும் விஞ்ஞான ரீதியிலானவையாக அமைதல் வேண்டும், மத இன அரசியல் சமூக மற்றும் புராண அடிப்படையில் இதற்கு தீர்வைக் காண முடியாது.

கொரோனா வைரஸ் புதிய நோய் என்பதால் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆரம்ப கட்டப் பரிந்துரைகள் மாற்றமடையலாம் என்று அவர் பதிலளித்துள்ளார். (க-இ)

# நீதிமன்ற செயற்பாடு மீண்டும் ஆரம்பம்!!

கொழும்பு, ஜன.5

கொரோனாத் தொற்றுக் காரணமாக இரண்டு மாத காலத்துக்கும் மேலாக தடைப்பட்டிருந்த கொழும்பு மாவட்ட நீதிமன்ற செயற்பாடுகள் அனைத்தும் மீண்டும் மேற்கொள்ளப்படவுள்ளன என்று நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

அத்துடன், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் பல குறைபாடுகள் இருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக கட்டடங்களுக்கு தேவையான மீள் செப்பனிடும் நடவடிக்கை, காரியாலய காப்பக வசதிகள் மற்றும் மலசலகூடங்கள் உட்பட ஏனைய அடிப்படை வசதிகளை விரைவில் பூர்த்தி செய்யவும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன் எனவும் தெரிவித்தார். (ற-இ)

# நீண்டநேரம் கணினித்திரையில் இருந்தால் கண் பாதிக்கும்

***கண் மருத்துவர் எச்சரிக்கை***

கொழும்பு,ஜன.6

இணைய வழியாக கல்வி நடவடிக்கைகளை மாணவர்கள் முன்னெடுக்கையில்,கணினித் திரையின் முன்னால் அமர்ந்திருக்கும் கால எல்லை பற்றி கவனத்தில் கொள்வது அவசியம் என்று கொழும்பு கண் மருத்துவமனை விசேட நிபுணர் மானெல் பஸ்க்குவெல தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

'தரம் ஒன்றிலிருந்து தரம் ஐந்து வரையான வகுப்புகளைச் சேர்ந்த பிள்ளைகள் ஓய்வின்றி நாளொன்றுக்கு இரண்டு மணித்தியாலத்துக்கு மேல் கணினித் திரையின் முன்னால் அமர்ந்திருப்பது உசிதமானதல்ல.

இதன் மூலம் அவர்களின் கண்களுக்குப் பாதிப்பு ஏற்படலாம். இந்த விடயம் தொடர்பில் ஆசிரிகள் மாத்திரமின்றி பெற்றோரும் கவனம் செலுத்துவது அவசியம்" என்றார். (ஐ-இ)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில்

# 368 குடும்பங்கள் தனிமையில்

## *பிரதேச செயலர் தெரிவிப்பு*

முல்லைத்தீவு,ஜன.6

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடந்த நவம்பர் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் தற்போது வரை 368 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று பிரதேச செயலர் சி.ஜெயகாந் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த, தம்புள்ள மரக்கறி சந்தையுடன் தொடர்புடைய வியாபாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டது. இதனையடுத்து அவருடன் தொடர்புகளைப் பேணிய பல குடும்பங்கள் தனிமைப் படுத்தப்பட்டன.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிப் பொதிகள் கூட்டுறவு சங்கங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.என்றார். (ஐ-19)

# வவுனியா பட்டாணிச்சூரில் 4,078 பேர் தனிமையில்!

வவுனியா, ஜன.6

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் வசித்த கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், அந்தப் பகுதியிலுள்ள 938 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 78 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதையடுத்து பட்டாணிச்சூர் பகுதி பொலிஸாரால் நேற்றுக் காலை தற்காலிகமாக முடக்கப்பட்டதுடன், பொலிஸார் பாதுகாப்புக் கடைமைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியவர்கள் தொடர்பான விவரங்கள் சுகாதாரப் பிரிவினரால் திரட்டப்பட்டு வருகின்றன. (ற-110)

# தொடர் மழையால் விவசாயிகள் பாதிப்பு!

மன்னார், ஜன.6

மன்னார் மாவட்டத்தில் பெரும் போக நெற்பயிர் செய்கை வயல்களில் உருவாகியுள்ள புற்களுக்கு கிருமிநாசிகள் தெளிக்க முடியாமல் செய்கையாளர்கள் அந்தரிக்கின்றனர். தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாகவே இந்த நிலை உருவாகியுள்ளது.இதனால் தக்க சமயத்தில் புற்கள் வளராமல் தெளிக்க வேண்டிய கிருமி நாசினிகளைத் தெளிக்க முடியாதுள்ளது என்று மன்னார் மாவட்டத்தின் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ற-213)



## இன்றைய நாள்

**மேடம்:** குடும்பத்தினர் உங்களை அனுசரித்து நடந்து கொள்வார்கள். தம்பதிகளிடையே ஒருங்கிணைந்த எதிர்காலத்திட்டம் உருவாகும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**இடபம்:** சக வியாபாரிகள் மூலம் ஏற்பட்ட தடைகள் குறையும். புதிய முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் விரைந்து முன்னேறுவீர்கள். திடீர் செலவுகள் வந்தாலும் கடன் வாங்க வேண்டாம்.

**மிதுனம்:** சக ஊழியர்களால் சிறு சிரமங்கள் ஏற்பட்டு சரியாகும். இளைஞர்களுக்கு எதிர்பார்த்ததை விட வெற்றி வாய்ப்புக் கூடும். தொட்டது துலங்கும். நண்பர்களுடன் வருத்தம் வரலாம்.

**கடகம்:** பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்ட முயற்சிப்பீர்கள். சாலையில் வண்டி ஓட்டும்போது சற்றுக் கவனம் தேவை. மனம் இரங்கி நன்மை செய்வீர்கள்.

**சிம்மம்:** அலுவலக விஷயத்தில் இருந்த வீண் கவலை தேவையே இல்லை. பல விஷயங்களில் முன்பு இருந்த பிரச்னையில் இருந்து மீண்டு வருவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கன்னி:** சிலருக்கு திடீரென்று முன்பிருந்த பிரச்னைகள் தீரும். மற்றவர்கள் விஷயத்தில் தலையிடுவதால் பழி ஏற்படலாம். நல்லவர்கள் யார் என்பதை கண்டறிய முயலுங்கள்.

**துலாம்:** முக்கிய முடிவுகளை சரியான நேரத்தில் எடுப்பீர்கள். சக ஊழியர்களால் வீண் பழி நேராமல் பார்த்துக் கொள்ளுங்கள். அவ்வப்போது தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**விருச்சிகம்** மிகக் குழப்பமான சமயத்தில் சரியான வழிகாட்டல் கிடைக்கும். உறவினர் ஒருவருக்கு ஏற்பட்ட பிரச்னையைத் தீர்ப்பீர்கள். நன்மைக்காக எடுத்த திட்டம் அனுகூலமாக முடியும்..

**தனுசு** சிலருக்கு வாடிக்கையாளர்களால் சந்தோஷங்கள் ஏற்படக்கூடும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். பயம் நீங்கும். முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும்.

**மகரம்** உங்களின் பெருந்தன்மையால் தொல்லைகள் நீங்கும். சகோதரி மூலம் எதிர்பார்த்த விஷயம் வெற்றியாகும். நண்பர்கள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு..

**கும்பம்:** நண்பர்கள் இடையே ஏற்பட்டிருந்த பிரச்னைகள் நீங்கும் எவரைப் பற்றியாவது புறம் பேசி வம்பில் மாட்டிக் கொள்வீர்கள். பெரிய அளவில் புது முதலீடு செய்வதைத் தவிர்க்கலாம்.

**மீனம்:** வேலைச்சுமை அதிகரிக்கும். தீய வழியில் செல்ல வேண்டாம். அலுவலகத்தில் கவனத்துடன் செயல்பட வேண்டிய நாள். நண்பர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

## சுற்றுலாவிகளின் வழித்தடம் தெரியாது

*கைவிரிக்கிறார் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தலைவர்*

கொழும்பு, ஜன.6

உக்ரைன் சுற்றுலாப்பயணிகள் இலங்கையில் எந்த பகுதிகளுக்குச் செல்கின்றனர் என்பது குறித்துத் தனக்குத் தெரியாது என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் கிமார்லி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில், உக்ரைன் சுற்றுலாப்பயணிகள் யால, மிரிச போன்ற பகுதிகளுக்கு சென்றமை தொடர்பில் ஊடகங்கள் மூலமே அறிந்துகொண்டேன்.

சுற்றுலாப்பயணிகள் செல்லவுள்ள இடங்கள்பயன்படுத்தவுள்ள வாகனச் சாரதிகள் சுற்றுலா வழிகாட்டிகள் உட்பட அனைத்து விபரங்களையும் முன்கூட்டியே வழங்க வேண்டும் என பயண ஏற்பாட்டாளர்களுடன் உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. இந்த விபரங்களைப் பெற முயன்றும் அவை கிடைக்கவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (வ-இ)

## தொலைக்கல்வி முறையின் குறைபாடுகளுக்குத் தீர்வு

*கல்வி அமைச்சு தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.6

தொலைக்கல்வி முறையில் நிலவும் குறைபாடுகளை கண்டறிந்து அவற்றுக்கு தீர்வு வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்காக கிராமிய மட்டத்தில் தொலைத் தொடர்பாடல் கோபுரங்களை அமைக்க வேண்டும் என்று அமைச்சின் செயலாளர் கபில பெரேரா சுட்டிக் காட்டினார். (ஜ-இ)

## ஏற்றுமதி பயிர் உற்பத்தியாளருக்கு நாற்றுக்கன்றுகளும் ஆலோசனையும்

கொழும்பு, ஜன.6

ஏற்றுமதிப் பயிர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோருக்கு நாற்றுக்கன்றுகள் மற்றும் உற்பத்திக்கான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படும் என ஏற்றுமதி விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.பி. ஹீன்கெந்த தெரிவித்தார்.

பயிர்ச் செய்கையாளர்களுக்கு மஞ்சள், இஞ்சி, மிளகு, கறுவா, சாதிக்காய், கோப்பி, கொக்கோ முதலான சிறு ஏற்றுமதி பயிர்களுக்குரிய நாற்றுக் கன்றுகள் விநியோகிக்கப்படும்.

இதனுடன் தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படும். ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்திக்காக இவ்வாண்டு 700 மில்லியன் ரூபாவை செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளோம்.

சேதனப் பசளையைப் பயன்படுத்தி, பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதற்காக செயற்படும் விவசாய நிறுவனங்களுக்கு ஒன்றரை இலட்சம் ரூபா தொகை ஒதுக்கப்படவுள்ளதுடன் இவ்வாண்டு மூவாயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் மஞ்சள் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது என திணைக்களத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## 7,500 கிலோ மஞ்சள் சுங்கத்தினரால் மீட்பு

*வர்த்தகர் விளக்கமறியலில்*

கொழும்பு, ஜன.6

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 7 ஆயிரத்து 500 கிலோ மஞ்சள் தூள் சுங்க திணைக்களத்தின் இடர் மேலாண்மை பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த மஞ்சள் 19 ஆயிரத்து 350 கிலோ கோதுமை மா எனக் கூறப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. எனினும் சுங்கப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்போது 7 ஆயிரத்து 500 கிலோ மஞ்சள் தூள் மற்றும் 11 ஆயிரத்து 850 கிலோ கோதுமை மா என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன. இதன் பெறுமதி 15 லட்சத்து 50 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன் சுங்கப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அது தொடர்பான ஆரம்பக்கட்ட சோதனை நடவடிக்கைகள் சுங்கத் திணைக்களத்தின் இடர் மேலாண்மைப் பிரிவால் முன்னெடுக்கப்பட்டன.

இது தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ந-இ)





கொரோனா தொற்று

## அபாய பகுதிகளின் புதிய வரைபடம்

கொழும்பு, ஜன.6

நாட்டில் கொரோனாத் தொற்று பரவல் அதிகமாக காணப்படும் அபாயமிக்க பகுதிகளின் புதிய வரைபடத்தை சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு வெளியிட்டுள்ளது. சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் பதிவான நோயாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த வரைபடம் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் தனிமைப்படுத்தல் மையங்களிலும் பதிவான நோயாளர்களின் எண்ணிக்கை அடங்கிய இறுதிப்படுத்தப்பட்ட பட்டியலும் தொற்று நோய் விஞ்ஞான பிரிவினால் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்த 14 நாள்களில் பதிவான கொவிட்19 நோயாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த தகவல்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

### 13 வரை....

என என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

அதேநேரம் இன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கனமழைக்கான வாய்ப்புக்கள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ.5)

### தரம் 1...

பெறும் மாணவர்களுக்கு பெப்ரவரி மாதத்தின் இரண்டாவது வாரத்திலேயே பாடசாலைகள் ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போது கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

தரம் 2 முதல் தரம் 13 வரையான மாணவர்களுக்கு எதிர்வரும் 11ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகும். பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான சுகாதார வழிகாட்டுதல்கள் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

வழிகாட்டுதல்கள் தொடர்பாக நாளை (இன்று) ஆசிரியர்கள் உள்ளிட்ட தரப்புகளுடன் கலந்துரையாட வேண்டும் என்று அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நெறிமுறையைத் திருத்துவது தொடர்பான பெற்றோர்களின் கருத்துக்களையும், பரிந்துரைகளையும் பெற, அவர்களும் கலந்துரையாடல்களுக்கு அழைக்கப்படுவாரகள்.

நாளை (இன்று) முதல் எதிர்வரும் 9ஆம் திகதிவரை இவ்வாறான கலந்துரையாடல்கள் நடத்தப்படும். தரம் ஒன்று மாணவர்களுக்காக பெப்ரவரி மாதம் இரண்டாவது வாரம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்.என்றார். (எ-இ)

### அத்துரலிய தேரர்....

ளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றார்.

சபாநாயகர் முன்னிலையில் பதவியேற்றதை அடுத்து அவர் உறுப்பினர்கள் பெயர் பட்டியலில் கையொப்பமிட்டார்.

கடந்த பொதுத் தேர்தலில் எங்கள் மக்கள் சக்தி கட்சிக்குக் (அபே ஜனபல கட்சி) கிடைத்த தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அத்துரலிய ரத்தன தேரரின் பெயரைத் தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவித்திருந்தது.

ஜாதிக ஹெல உறுமயவை பிரதி நிதித்துவப்படுத்தி 2004ஆம் ஆண்டு களுத்துறை மாவட்டத்தில் முதல் தடவையாக நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட ரத்தன தேரர், 2010ஆம் ஆண்டு ஏழாவது நாடாளுமன்றத்துக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக கம்பஹா மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டார்.

இவர் 2015ஆம் ஆண்டு எட்டாவது நாடாளுமன்றத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார். (ஒ44)

### வடக்கில்...

ரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 496 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 13 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் மருதனார்மடம் சந்தை கொரோனாக் கொத்தணியுடன் தொடர்புடையவர். இவர் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் கொழும்பில் இருந்து வந்திருந்த நிலையில், தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். 14 நாள்கள் தனிமைப்படுத்தலின் பின்னர் அவருக்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கிளிநொச்சியில் உள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் கற்றலுக்காக வந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த 23 வயது மாணவி ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் கேகாலையைச் சேர்ந்தவர். இவர் கடந்த முதலாம் திகதி வளாகத்துக்கு வந்துள்ளார். அவர் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில், முதலாவது பி.சி.ஆர். சோதனையில் தொற்றுத் தொடர்பில் முடிவெடுக்க முடியாத நிலையில், மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவரது வீட்டுக்கு அயலில் உள்ள வீட்டினருக்கு முன்னர் தொற்று உறுதியாகியிருந்தது என்று தெரியவருகின்றது.

வவுனியா, பட்டாணிச்சூரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 3 வயதுக் குழந்தை ஒன்றும் உள்ளடங்குகின்றது. இவர்கள் சில நாள்களுக்கு முன்னர் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கிளிநொச்சி வளாக மாணவன் மற்றும் வவுனியா கர்ப்பிணி பெண் ஆகியோரின் அயல் இடங்களைச் சேர்ந்தவர்கள்.

மன்னாரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குடும்ப உறுப்பினர் ஒருவர் கொழும்பில் இருந்து மன்னார் வந்து சென்றிருந்தார். அவருக்கு கொழும்பில் தொற்று பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது. அதையடுத்து மன்னாரில் உள்ள குடும்பம் தனிமைப்படுத்தப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அதில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

(எ-26,110,113,6)

### கொரோனா...

தல் வழங்கியுள்ளது. கோவக்ஸ் வசதி என்பது அரசு மற்றும் தடுப்பூசி உற்பத்தியாளர்களிடையே அங்கீகரிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகளின் சமமான விநியோகத்தை உறுதிசெய்ய தொடங்கப்பட்ட ஒரு உலகளாவிய திட்டமாகும்.

கோவக்ஸ் வசதி, தடுப்பூசிகள் மற்றும் நோய்த்தடுப்புக்கான உலகளாவிய கூட்டணியுடன் இலங்கை ஏற்கனவே இணைந்துள்ளது. இந்த வசதி மூலம் கொரோனா தடுப்பூசிகளைப் பெற இலங்கை தகுதியுடையது என்றும் உலக சுகாதார நிறுவனம் அங்கீகாரம் அளித்துள்ளது.

இலங்கையின் குழு, சேமிப்பக திறன் மற்றும் கொரோனா தடுப்பூசி செயல்முறை தொடர்பான தொழில்நுட்ப தகவல்களை விவரிப்பதன் மூலம் தடுப்பூசிகளைப் பெறுவதற்கான ஆரம்ப விண்ணப்பத்தை அரசு சமர்ப்பித்தது என்று சுகாதார அமைச்சர் தனது அமைச்சரவை ஆய்வறிக்கை மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த செயல்முறைக்கான இரண்டாம் கட்டத்தின் ஒரு பகுதியாக ஜனவரி 8ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை இந்த உடன்படிக்கையை செய்ய வேண்டும். தடுப்பூசி விண்ணப்பத்தின் இரண்டாம் பகுதியை சட்ட மா அதிபர் வழங்கிய வழிகாட்டுதல்களின்படி சமர்ப்பிக்கவும், கோவக்ஸ் வசதி மூலம் தடுப்பூசிகளை ஒதுக்கும்போது உற்பத்தியாளருடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (ஒ-இ)

### 23 குடும்பங்கள்...

யாழ்ப்பாணம், ஜன.6

பருத்தித்துறை புலோலியில் நேற்று முன்தினம் ஒருவர் கொரோனா தொற்றுடன் இனங்காணப்பட்ட நிலையில், அவருடன் தொடர்பைப் பேணிய 23 குடும்பங்கள் நேற்றிரவு முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. தொற்றாளர் பலருடன் தொடர்பைப் பேணியிருக்கும் நிலையில், அவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

நெல்லியடியில் உள்ள டயலொக் நிறுவன அலுவலகத்துக்குத் தொற்றாளர் சென்று, அங்கு அரை மணி நேரம் செலவிட்டுள்ளார். அதையடுத்து அந்த அலுவலகம் முடக்கப்பட்டு, அங்கு பணியாற்றுபவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அந்தச் சமயம் அருகில் உள்ள கடை வர்த்தகர் ஒருவரும் அந்த அலுவலகத்துக்குச் சென்றதால், அவரும் தனிமைப்படுத்தப்பட்டதுடன், அவரது கடையும் முடக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நெல்லியடியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு தொற்றாளர் சென்றிருப்பதால், அந்த உணவகமும் மூடப்பட்டு, அங்கு பணியாற்றுபவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நெல்லியடியில் உள்ள வங்கிகளின் தன்னியக பணப்பரிமாற்ற இயந்திரங்களுக்கும் தொற்றாளர் சென்றிருப்பதால், அங்கு தொற்று நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-23)

### விடுதலை...

தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களிலும் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

நாடாளாவிய ரீதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை கொரோனாத் தொற்றின் ஆபத்திலிருந்து பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகயை விரைந்து எடுக்க வேண்டும் என்று போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

சிறையில்வாடும் கைதிகளில் 7 பேர் பெண்களாக உள்ளனர். அவர்களில் ஒருவர் ஒன்றரை வயது குழந்தையின் தாய். தமிழ் அரசியல் கைதிகளில் 14 பேர் வரையிலானவர்கள் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இந்த விடயத்தில் மனிதாபிமான ரீதியில் நடவடிக்கைகளை அவசரமாக முன்னெடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆபத்தை எதிர்நோக்கி உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரும் மனு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அனுப்பப்பட்டது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்தில் இரண்டு இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குப் பின்புறமாகவுள்ள நல்லை ஆதீனம் முன்பாகவும், சாவகச்சேரி பேருந்து நிலையம் முன்பாகவும் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

**வவுனியா**

நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா காமினி மகா வித்தியாலத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

**கிளிநொச்சி**

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட் டது. கிளிநொச்சி ஏ 9 வீதியில் அமைந்துள்ள பழைய மாவட்டச் செயலகம் முன்பாக போராட்டம் காலை 10 மணியளவில் ஆரம்பமானது. அரசியல் கைதிகளின் குடும் பங்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் வடக்கு மாகாண மக்களின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

**மன்னார்**

மன்னாரில் இரண்டு இடங்களில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பப்பட்டது. மன்னார் நகர் மற்றும் முருங்கன் பேருந்து நிலையத்தில் போராட்டம் நடத்தப்பட்டது. மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

**முல்லைத்தீவு**

அரசியல் கைதிகளை விடுவிக்கு மாறு கோரி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்பாக, சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம் அமைப்பின் தலைமையில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

**மட்டக்களப்பு**

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(ஒ6,18,56,60,110,113,213,246)

## மானிப்பாய் பொதுச்சந்தை வேறு இடத்துக்கு மாற்றம்

வலி.தென்மேற்கு, ஜன.6

பொதுமக்கள் சமூக இடைவெளியை கடைப்பிடிக்கும் வகையில் மானிப்பாய் பொதுச்சந்தை, தற்போது செல்லமுத்து விளையாட்டு மைதானத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. கொரோனாத்தொற்றுக் காரணமாக குடாநாட்டில் உள்ள அனைத்துச் சந்தைகளும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன. இதனால் மரக்கறி மற்றும் கடல் உணவு வியாபாரி கள் வீதிகளில் வைத்து வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறே வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள மானிப்பாய் பொதுச்சந்தை வியாபாரிகளும் சந்தையை அண்டிய பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் சுகாதார சீர்கேடுகள் மட்டுமல்ல போக்குவரத்துக்கு இடையூறும் ஏற்படுகிறது.

இந்த நிலை குறித்து உறுப்பினர்கள் தவிசாளரின் கவனத்துக்கு கொண்டுவந்ததைத் தொடர்ந்து, மானிப்பாய் பொதுச் சந்தை, செல்லமுத்து மைதானத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. (ஐ-115)

## சிப்பாய் உயிர்மாய்ப்பு

இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் காலை தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு உயிரை மாய்த்துக்கொண்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கொஸ்கம இராணுவ முகாமில் கடமையாற்றிய மொரவக்க களு போவிட்டியன பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய சிப்பாயொருவரே முகாமினுள் வைத்து தனது கடமைக்கு பயன்படுத்தும் துப்பாக்கி யைப் பயன்படுத்தி தன்னைத் தானே சுட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப)

# உ.கிழங்கு நடுகைக்குப் பின்னரே செய்கையாளர்களுக்கு மானியம்

யாழ்ப்பாணம்,ஜன. 6

**யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்கை, செய்கையாளர்கள் நடுகை செய்தபின்னரே, மானியம் வழங்க முடியும் என்று யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

மாவட்டத்தில் கோப்பாய், தெல்லிப்பழை மற்றும் உடுவில் பிரதேச செயலகப் பிரிவுகளில் உருளைக்கிழங்கு செய்கை பண்ணப்படுகிறது.
அங்கு நடுகை முழுமை பெறாத காரணத்தால், சரியான விபரங்களை மானியத்துக்காகப் பரிந்துரைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த மாத இறுதிக்குள் அனைத்து உருளைக் கிழங்கு செய்கையாளர்களும் நடுகையை முடிப்பார்கள் என்று நம்பப்படுகிறது. அதன் பின்னர் மானியத்துக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-159)

## குருவிட்ட தபாலகம் தற்காலிகமாக பூட்டு

ஜெயவர்த்தனபுரம், ஜன.6
கொரோனாத் தொற்று காரணமாக, குருவிட்ட பிரதான தபால் அலுவலகத்தை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை மூடுவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என பிராந்திய பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.
அத்துடன், 24 ஊழியர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் சுகாதார அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (ரி5)



## யானைகளால் சேதமடைந்த பிள்ளையார் கோவில் கட்டடம்

வன்னேரிக்குளம்,ஜன.6
முல்லைத்தீவு துணுக்காய் அம்பலப்பெருமாள் குளம் கிராமத்தில் உள்ள பிள்ளையார் கோவில் கட்டடம் யானைகளால் சேதமாக்கப்பட்டுள்ளது.
அம்பலப்பெருமாள்குளம் குடியேற்றத் திட்டம் 1968 இல் ஆரம்பிக்கப்பட்டதுமுதல், குறித்த பிள்ளையார் ஆலயம் மக்களால் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.
அண்மைக்காலமாக குறித்த பகுதியில் உள்ள பயிர் நிலங்கள் மற்றும் குடியிருப்புக்கள் போன்றவற்றை சேதப்படுத்தி வந்த யானைகள் தற்போது கோவில் கட்டடத்தையும் சேதப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி2)

# பச்சிலைப்பள்ளி செயலரின் இடமாற்றத்தை நீக்குங்கள்

*பிரதேச மக்கள் கோரிக்கை*

கிளிநொச்சி ஜன 6
கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளரின் இடமாற்றத்தை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அந்த மக்கள் மேலும் தெரிவித்ததாவது;
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராக உள்ள பரமோதயன் ஜெயராணிக்கான இடமாற்றம் தொடர்பாக அண்மைய நாள்களாக தகவல்கள் வெளிவந்துள்ளன. அவரின் இடமாற்றத்தை பிரதேச மக்கள் விரும்பவில்லை. பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராகப் பொறுப்பேற்ற பெண் பிரதேச செயலாளரான ஜெயராணி, பிரதேச மக்களின் தேவைகளை அறிந்து அவற்றுக்கேற்றால்போல் நடவடிக்கைகளை எடுத்து தேவைகளை நிறைவு செய்து வந்துள்ளார். அவர் பிரதேச அபிவிருத்திக்காக பல்வேறு கோணங்களில் செய்கையாளர்களுக்கு பல வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். பிரதேசத்தில் இன்னும் சில இடங்கள் விடுவிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. அத்துடன் சில அபிவிருத்தித் தேவைகளும் காணப்படுகின்றன. எனவே இன்னும் சில காலம் அவர் இங்கு கடமையாற்றி முழுமையான அபிவிருத்தியைப் பெற்றுத்தர அவரின் இடமாற்றத்தை குறிப்பிட்டதொரு காலத்துக்காவது ரத்துச்செய்ய வேண்டும். இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ப-6)

## கசிப்புடன் பெண் கைது

கிளிநொச்சி,ஜன:6
துன்னாலைப் பகுதியிலிருந்து தினமும் விசுவமடுவுக்கு வந்து, கசிப்பைப் பெற்றுச் சென்று விற்பனை செய்து வந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.
பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தவேளை குறித்த பெண் கைதுசெய்யப்பட்டார்.
60 வயது மதிக்கத்தக்க துன்னாலையைச் சேர்ந்த குறித்த பெண் 19 லீற்றர் கசிப்பைத் தம்முடன் எடுத்துச் சென்றபோது கைதுசெய்யப்பட்டார். (க-113)



## ஆசிகுளம் வயல்களில் யானைகள் அட்டகாசம்



வவுனியா,ஜன.6
வவுனியா, ஆசிகுளம் பகுதியில் குடலைப் பருவத்திலுள்ள நெல் வயல்களை, காட்டு யானைகள் அழித்து வருகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.
ஆசிகுளம் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள வயல்களுக்குள், யானைகள் கூட்டமாகப் புகுந்து அழிவை ஏற்படுத்தி வருகின்றன.
இதனால் பல ஏக்கர் நெல் வயல்கள் அழிவடைந்துள்ளன. வங்கிகளில் கடன்பெற்று விவசாயம் செய்த நிலையில் காட்டு யானைகள் நெல் வயல்களை அழித்தமையால், கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.
இதனால், தமக்குப் பாதுகாப்பான வேலி அமைத்து தருவதுடன், விவசாய அழிவுக்கான இழப்பீடுகளையும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரியுள்ளனர். (க-18)

## மாநகர திண்மக்கழிவகற்றல் தொடர்பில் கலந்தாய்வு

யாழ்ப்பாணம், ஜன.6
யாழ்ப்பாண மாநகரத்தின் திண்மக்கழிவகற்றல் தொடர்பில் மாநகர சபையின் தூய்மைப் பணியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், மாநகர முதல்வருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாண மாநகரத்தை தொடர்ச்சியாக தூய்மையாக வைத்திருப்பதுடன், மாநகரில் காணப்படும் கழிப்பறைகள் அனைத்தும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என்றும் மாநகர முதல்வர் தெரிவித்தார்.
அத்துடன் யாழ்.மாநகரம் முழுவதையும் தூய்மையாக வைத்திருப்பதற்கான உத்தேச செயற்றிட்டத்தை 2 நாள்களுக்குள் தனக்கு சமர்ப்பிக்குமாறும் தொழிற்சங்கத்திடம் மாநகர முதல்வர் கேட்டுக் கொண்டார்.
அதனை ஏற்றுக்கொண்ட தொழிற்சங்கத்தினர் அச்செயற்றிட்டத்தை தயாரித்து இரு நாள்களில் கையளிக்கின்றோம் என உறுதியளித்தனர்.
சந்திப்பில் யாழ்.மாநகர முதல்வரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன், மாநகர சபை ஆணையாளர் த. ஜெயசீலன், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களான வரதராஜன் பார்த்தீபன் மற்றும் சிவகாந்தன் தனுஜன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-26)


## ஐயன்கன்குளம் மகா வித்தியை பரீட்சை நிலையமாக மாற்றுக

*பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை*

வன்னேரிக்குளம்,ஜன.6
முல்லைத்தீவு ஐயன்கன்குளம் மகா வித்தியாலயத்தை, இவ்வாண்டு நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை நிலையமாக மாற்றுமாறு துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் சற்குணநாதன் சுயன்சன் கோரிக்கை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஐயன்கன்குளம், புத்து வெட்டுவான் மற்றும் பழைய முறிகண்டி ஆகிய கிராமங்களின் மாணவர்கள் கடந்த காலங்களில் இருபது கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மல்லாவி மத்திய கல்லூரிக்குச் சென்றே பரீட்சைக்குத் தோற்றி வந்தனர்.
பஸ் போக்குவரத்து வசதி இல்லாத குறித்த கிராம மாணவர்கள் பலத்த நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே பரீட்சைகளுக்குத் தோற்றி வந்தனர். இந்நிலையில் இவ்வாண்டு நடைபெறவுள்ள க. பொ.த.சாதாரணப் பரீட்சை நிலையத்தை ஐயன்கன்குளம் மகா வித்தியாலயத்தில் அமைப்பதற்கான ஏற்பாடுகளை துணுக்காய் கல்வி வலயம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறேன் என்றார். (ஐ-ரி2)

இந்திய தலைநகரில்

# 40 நாள்கள் கடந்த போராட்டம்: 60 விவசாயிகள் இதுவரை சாவு



**புதுடில்லி, ஜன. 6**
**இந்திய மத்திய அரசின் புதிய விவசாய சட்டத்துக்கு எதிராக புதுடில்லியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளில் 60 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர் என பாரத்கிசான் யூனியன் என்ற விவசாயிகள் சங்கத்தின் தலைவர் ராகேஸ் திகாயித் தெரிவித்துள்ளார்.**

இதற்கு அரசாங்கமே பதிலளிக்க வேண்டும். புதிய விவசாய சட்டங்கள் இரத்துச்செய்யப்படுவதை தவிர வேறு எந்த தீர்வையும் விவசாயிகள் பரிசீலனை செய்யமாட்டார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்திய மத்திய அரசு கொண்டுவந்துள்ள 3 புதிய வேளாண் சட்டங்களை திரும்பப் பெறவலியுறுத்திய விவசாயிகளின் போராட்டம் 40 நாள்களைக் கடந்துள்ளது.

குளிர் மற்றும் மழையைப் பொருட்படுத்தாமல் விவசாயிகள் போராட்டக் களங்களில் முகாமிட்டுள்ளதால் வயதான விவசாயிகளின் உடல்நிலை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. போராட்டக் களங்களில் விவசாயிகள் உயிரிழப்பும் தொடர்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-வஇ)



போக்குவரத்து வசதியின்மையால்

## மூதாட்டியை வண்டியில் இழுத்துச்சென்ற சிறுவர்

சென்னை, ஜன. 6
போக்குவரத்து வசதி இன்மை காரணமாக பொங்கல் பரிசு வாங்கச்சென்ற மூதாட்டியை இழுவை வண்டியில் ஏற்றி சிறுவர்கள் அழைத்துச் சென்ற சம்பவம் தமிழ்நாடு புதுக்கோட்டையில் இடம்பெற்றுள்ளது.

கொத்தமங்கலம் பகுதியைச் 70 வயது மூதாட்டி ஒருவர் பொங்கல் பரிசுப் பொருள்கள் வாங்க வீட்டில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கடைக்கு நடந்து சென்றுள்ளார்.

நீண்ட தூரம் நடந்ததில் சோர்வடைந்த அவர் சாலையோரத்தில் உள்ள மரத்தடியில் படுத்துவிட்டார். இதையறிந்த, அப்பகுதியைச் சேர்ந்த ஒன்பது வயது இரட்டைச் சகோதரர்கள் இழுவை வண்டியைக் கொண்டு சென்று அதில் மூதாட்டியை படுக்க வைத்து கடைக்கு வண்டியை இழுத்துச் சென்றனர். அதேபோன்று பொருள்களை அவர் வாங்கி முடித்ததும் வாங்கிக் கொண்டு திரும்பியவரை, மீண்டும் அவரது வீட்டுக்கு அழைத்துச்சென்று இறக்கி விட்டனர். சிறுவர்களது இந்தச் செயல் சமூக வலைத் தளங்களில் வைரலாகி வருகின்றது. அவர்களுக்குப் பலரும் பாராட்டுத் தெரிவித்து வருகின்றனர். (ம-வஇ)

## ஸ்கொட்லாந்தில் ஊரடங்கு நீடிப்பு

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக ஊரடங்கை நீடித்து உத்தரவிட்டது ஸ்கொட்லாந்து அரசு.

இங்கிலாந்தின் தெற்குப் பகுதியில் கொரோனா தீவிரமாகியுள்ளதை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகாகவே இந்த ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று ஸ்கொட்லாந்து அறிவித்துள்ளது.

இதன்படி அங்கு இந்த மாதம் முழுவதும் ஊரடங்கு நடைமுறையில் இருக்கும். (ம)



இஸ்ரேலில்

## சுற்றுச்சூழல் பாதிப்புகளால் ஆண்டுக்கு 3,000பேர் இறப்பு

ஜெருசலேம், ஜன. 6
சுற்றுச்சூழல் பாதிப்புகளால் இஸ்ரேலில் ஆண்டுக்கு 3 ஆயிரம் பேர் வரை உயிரிழக்கின்றனர் என அந்த நாட்டு சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளி மாசடைவு, சுற்றுச்சூழல் அனர்த்தங்களால் நாட்டில் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. 'சுற்றுச்சூழல் மாசுபாடுகள் தொற்று நோய் பரவலில் முக்கிய பங்கு வகிக்கிறது.

கொரோனாத் தொற்று பாதிப்பிலும் வளிமாசடைவு முக்கிய பங்கு வகிக்கிறது' என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-வஇ)

## மூன்று வாரங்களுக்கு முடங்குகிறது இங்கி.

லண்டன், ஜன. 6
கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக அடுத்த மூன்று வாரங்களுக்கு இறுக்கமான ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று பிரிட்டன் அரசு அறிவித்தது.


பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் இது தொடர்பில் விடுத்துள்ள அறிவிப்பில், உருமாற்றம்பெற்ற கொரோனா காரணமாக பெரும் நெருக்கடிக்குள் நாடு தள்ளப்பட்டுள்ளது. இதனால் அடுத்த மூன்று வாரங்களுக்கு இறுக்கமான ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது' என்றார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தால் கொரோனா தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)









அரசியல் கைதிகளை விடுவிக்குமாறுகோரி தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் நேற்றுப் பரவலாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பெருமளவு உறவுகள் ஒன்று திரண்டு சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றியவாறு இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (ம)

# பணிநிலை வேண்டுகை

**கிளிநொச்சியில் இயங்கிவரும்**
**சிவகுரு அரிசி ஆலைக்கு**
**வேலையாள்கள் உடனடியாகத் தேவை**

I. மில் முகாமையாளர்
II. மில் இயந்திர இயக்குனர் (போதிய அனுபவம் உள்ளவர்)
III. ஒப்பந்த அடிப்படை வேலையாள்கள் (குழுவாக)
IV. சமையலாளர் (ஆண்)
V. மில் இயந்திர திருத்துனர்கள் (ஒப்பந்த அடிப்படை)

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 772 2305

## 27 ஆம் ஆண்டு நினைவலைகள்

வருடங்கள் பல சென்றாலும்
உங்கள் நினைவுகளுடன் என்றும் வணிகர்கள்



மண்ணில் 22 . 08 . 1937
விண்ணில் 06 . 01 . 1994

**அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்**

(முன்னாள் தலைவர். சாவகச்சேரி கைத்தொழில். வணிகர் மன்றம்
முன்னாள் உரிமையாளர். அம்பிகா பார்மசி. சாவகச்சேரி.

மன்றச் சேவைக்கென வந்து அமரத்துவமடைந்த அமரரின் நினைவு நாளும் நினைவுக்கூட்டமும் இன்று (06.01.2021) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மன்ற அலுவலகத்தில் உள்ள அமரரின் நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் இந்த நிகழ்வில் அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டிக் கொள்கின்றோம்

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

## மரண அறிவித்தல்



**திருமதி குயின்மேரி ஜெயராணி**
**கிரேகரி தங்கராஜா**

யாழ்ப்பாணம் பிரதான வீதியைப் பிறப்பிடமாகவும் மத்தியூஸ் வீதியை வாழ்விடமாகவும் தற்போது பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட குயின்மேரி ஜெயராணி 31.12.2020 அன்று பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் (றோஸ் ஆட்ஸ் ஸ்ரூடியோ), எலிசபெத் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான டேவிற் - அன்னம்மா தம்பதியரின் பிரியமான மருமகளும், காலஞ்சென்ற டேவிற் கிரேகரி தங்கராஜாவின் பாசமிகு மனைவியும், உஜித்தா, விஜித்தா (துங்கா), மக்ஸி, பிறின்ஸி ஆகியோரின் அன்புத் தாயும், ஜோய், ராஜா, சசி, பிந்து ஆகியோரின் அருமை மாமியும், ஜெனிபர், ஜெஸன், ஜெவின், துஷாரா, அஷ்வின், இனியா, இயல், ஈழன், ஸ்வரன், மேரிஸ்வாதி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ஜெயசீலி, ஜெயதேவி மற்றும் ஜெயவதி (மற்றில்டா), பேனாட் (அன்ரன்), ஜெயராஜா(விக்ரர்), ஜெயசோதி, அருட்சகோதரி லூசியா (தி.சி.க.சபை), பிரான்ஸிஸ் ஜெயக் குமார், ஜெயமலர், தாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனையும் நிகழ்வும் இன்று (06.01.2021) புதன்கிழமை பிரான்சில் நடைபெறும்.

**89, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
ஜெயவதி யோசெப்
(மற்றில்டா)
076 009 3195

## ஆதனவரியை செலுத்துதல் - யாழ்மாநகரசபை

2021 ம் ஆண்டிற்கான ஆதனவரியினை 2021 ஜனவரி 01 தொடக்கம் 2021 ஜனவரி 31ம் திகதிவரை 10% கழிவுடன் செலுத்த முடியும். அதற்கமைய மாநகர வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி அலுவலக நாட்களிலும், வார இறுதி நாட்களிலும், விடுமுறை தினங்களிலும் (பொங்கல் தினம் தவிர்த்து) காலை 8.30 தொடக்கம் மாலை 3.00 மணி வரை ஆதன வரியை செலுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

**வி. மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர், மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

மட்டுவில், சாவகச்சேரியில் வீட்டு
வேலைக்குப் பணிப்பெண் தேவை.
நன்கு சமைக்கத் தெரிந்தவர்கள்
விரும்பத்தக்கது.
சம்பளம் 30,000/=

**075 281 2559**



**நாரந்தனை சைவ மகாசபையின்**
**விசேட பொதுக் கூட்டம்**
**(தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள்**
**ஆலயம்) 17.01.2021**

அம்பிகை அடியார்களே!

நிகழும் சர்வாரி வருடம் தை மாதம் 4ம் நாள் (17.01.2021) ஞாயிற்றுக் கிழமை பகல் 11.30 மணியளவில் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மண்டபத்தின் சபைத் தலைவர் திரு. வே. துரைராசா தலைமையின் கீழ் மேற்படி விசேட பொதுக்கூட்டம் நடைபெற அம்பிகையின் அருள் கூடியுள்ளது அத்தருணம் சபை அங்கத்தவர்கள். அம்பிகை அடியார்கள் யாவரும் வருகை தந்து ஆலய வளர்ச்சியில் பங்குபற்றுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

**நிகழ்ச்சி நிரல்**

- தேவாரம்
- தலைமையுரை
- **இராஜகோபுர திருப்பணி வேலை** தொடர்பான கலந்துரையாடல்
- திருப்பணிக்கு புதியகணக்கு ஆரம்பித்தல் தொடர்பான முன்னாயத்தம்
- நன்றியுரை
- தேவாரம்

சைவமகாசபை
நாரந்தனை.
03.01.2021

செயலாளர்
திரு.சி.தனபாலன்.

## மரண அறிவித்தல்



**திரு. குமாரசாமி பரராசசிங்கம்** (செல்வம்)


யாழ். நெடுந்தீவு மத்தி காரைவளவைப் பிறப்பிடமாகவும், உடுவில், கனடா (Scarbrough) ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி பரராசசிங்கம் அவர்கள் 31-12-2020 வியாழக்கிழமை அன்று காலமானார்.

தகனம்: 06 Jan 2021 6:30 PM
Highland Hills Crematorium, 12492 Woodbine Avenue,Gormley, Ontario, L0H 1G0, Canada

தொடர்புகளுக்கு: குலம் – மகன்: +16477017444,
தயா – மகள்: +19057823111, டிலிப் – மகன்: +447950507077,
அகிலன் – மகன் +14166168200, யமுனா – மகள்: +441932886706
Dr Sivapathamoorthy Subramaniam,
61/18 Pirampady Lane, Kokuvil, Jaffna.
Phone: 0773155100

தகவல்:
திருமதி யமுனா செல்வகுமரன்
மகள் (UK)

## மரண அறிவித்தல்



**சிவப்பிரகாசம் பாலசிங்கம்**

ஏழாலை தெற்கு, விசிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் பாலசிங்கம் நேற்று (05.01.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - சுந்தரம் தம்பதியரின் அன்பு மகனும், மங்கையற்கரசி, செல்வராணி, காலஞ்சென்ற பராசக்தி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான முத்துசாமி, தம்பி மற்றும் நாகராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2021) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

# யாழ். பல்கலையில் மேற்கொள்ளப்பட்ட மாணவர்களின் உணவொறுப்பு முடிவு கண்டது!

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாயிலில் நேற்றுமுன்தினம் முதல் உணவொறுப்பில் ஈடுபட்ட மாணவர்களின் போராட்டம் நேற்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

வகுப்புத் தடை உள்ளிட்ட தண்டனை வழங்கப்பட்ட மாணவர்கள் தம்மைத் தண்டனைகளில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்றுமுன்தினம் உணவு ஒறுப்புப் போராட்டத்தை நடத்தினர். மாணவர்களின் போராட்டத்தை அடுத்து, நேற்றுமுன்தினம் மாலை பல்கலைக்கழகத் துணைவேந்தர் தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, மனிதாபிமான அடிப்படையில் மாணவர்கள் பல்கலைக்கழகத்தினுள் நுழைவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை உடனடியாக விலக்கிக் கொள்கின்றேன் என அறிவித்தார். எனினும், தங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளில் இருந்து தாம் நிபந்தனையற்ற முறையில் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி மாணவர்கள் தமது உணவு ஒறுப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். இந்த நிலையில் மாணவர்கள் உணவு ஒறுப்பில் ஈடுபட்டிருந்த இடத்துக்கு நேற்று மாலை சென்ற துணைவேந்தர் உணவு ஒறுப்பைக் கைவிடுமாறு மாணவர்களிடம் கேட்டுக் கொண்டார். மாணவர்கள் பல்கலைக் கழகத்தினுள் வந்து தமது வழமையான செயற்பாடுகளின் மூலம், அந்தந்தத் துறைத் தலைவர்கள் மற்றும் பீடத்தின் விரிவுரையாளர்களின் நல்லெண்ணத்தை வெல்வதற்கு முயற்சிசெய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இதனையடுத்து, போராட்டத்தைக் கைவிடுவதற்கு மாணவர்களும் முன்வந்தனர். (ம)

## காணி விற்பனைக்கு

வவுனியா ஓமந்தை (A9 வீதி) கமநல சேவை நிலையத்திற்குப் பின்புறமாக இரண்டு ஏக்கர் மேட்டுக்காணி (அளிப்பு உறுதி) உடன் விற்பனைக்குண்டு.

076 868 0194
Email . Thambiah47@yahoo.com

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு
கட்டப்பிராய் பகுதியில்
வீடு வாடகைக்கு உண்டு.

077 183 2404

## வேலையாள்கள் தேவை

கட்டட பொருள் விற்பனை நிலையத்தில் பணிபுரிவதற்கு உதவி நிர்வாக ஊழியர் தேவை.
(வயது 25 இற்குமேல்) (பெண் ஊழியர்)

077 811 8300

## வேலையாட்கள் தேவை

பருத்தித்துறையில் இயங்கும் பார்சல் சேவை நிறுவனத்திற்கு ஆண் வேலையாட்கள் தேவை. பருத்தித்துறையில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 076 0094 946

## வேலைக்கு ஆள்கள் தேவை

**பளையில் உள்ள**
**தென்னந்தோட்டத்தில்**
தங்கி நின்று வேலை
செய்யக்கூடிய ஆள்கள் தேவை.
சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

077 183 2404

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
20
.
03
.
1952



இறப்பு
19
.
12
.
2019

அமரர் உயர்திரு
## முத்தையா தெய்வேந்திரம் (தேவு)

அன்பான அப்பாவே! பாசத்தின் திருவுருவே!
ஆண்டுகள் ஒன்று ஓடி மறைந்திட்டாலும்
உங்கள் பிரிவின் துயரமது ஓயாது ஒருபோதும்
பாசமாய் வளர்த்தெம்மைத் தாங்கி நின்றீர்
இனி எப்போ காண்போமென ஏங்குகிறோம்
உங்களது ஆத்மா சாந்திபெற அருள்வேண்டி
என்றென்றும் அரன் பாதம் துதிக்கின்றோம்.

சோமசுந்தரப் புலவர் வீதி,
நவாலி வடக்கு.
குடும்பத்தினர்



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
# மரண அறிவித்தல்

பிறப்பு
.
07
.
10
.
1944



இறப்பு
.
04
.
01
.
2021

## திருமதி இரத்தினம் சௌந்தரம்

கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி இரத்தினம் சௌந்தரம் அவர்கள் 04.01.2021 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைரமுத்து இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், ஜெயஸ்ரீ, சிவாகரன், சைலஸ்ரீ ஆகியோரின் அன்புத் தாயாரும், மோகனேஸ்வரன், சுபதர்சினி, லோகராஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், செந்தூரன், அர்சிகன், ஆதித்தியன், ரிஷிகேஸ், லக்ஷன், கிரிதீசன், கஜன், கிரித்திகா, சங்கவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி, சண்முகலிங்கம், காலஞ்சென்ற துரைசிங்கம், பத்மநாதன், காலஞ்சென்ற லோகேஸ்வரி, கோமளேஸ்வரி, காலஞ்சென்ற சரஸ்வதிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கண்டி வீதி, சங்கத்தானை சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (06.01.2021) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிபிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்டி வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 481 475


கிளிநொச்சி
# கொரோனா நிலையத்திலிருந்து 20 பேர் நேற்று வெளியேறினர்!

கிளிநொச்சி, ஜன. 6



கிளிநொச்சி கொரோனா சிகிச்சை நிலையத்திலிருந்து 20 பேர் சிகிச்சைகள் முடித்து நேற்றையதினம் வெளியேறினர்.

மருத்துவமனையால் நேற்றுக் காலை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேநேரம் புதிதாக 28 தொற்றாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் பெண்கள். அவர்களுடன் மொத்தமாக 77 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 22 பேர் ஆண்கள் 55 பேர் பெண்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)


# நிரந்தர வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பம்

இலங்கையில் 87 வருட முதன்மை நிறுவனமாக இயங்கி வரும் ARPICO குழுமத்தின் (Richard Pieris & Company ) துணை நிறுவனமான Arpico Insurance நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கான பின்வரும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

1. Sales manager

**ஆகக் குறைந்த தகைமை**

- காப்புறுதித் துறையில் குறைந்தது 01 வருடம் Unit Manager ஆக பணியாற்றிய அனுபவம். Sales Manger ஆக பணியாற்றியிருப்பது விரும்பத்தக்கது.
- சிறப்பான தலைமைத்துவப் பண்பு.
- Company Target அடைவதற்கான இயலுமை
- புதிய அணிகளை உருவாக்குவதற்கும் வழிநடத்துவதற்குமான இயலுமை.
- சவால்களை எதிர்நோக்கி வெற்றி கொள்வதற்கான விருப்பமும் இயலுமையும்.

**கொடுப்பனவுகள்**

- 30,000 - 50,000 வரையிலான அடிப்படைச்சம்பளம்
- 30,000 - 50,000 வரையிலான பிரயாண கொடுப்பனவு மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்
- இலவச காப்புறுதிச் சலுகை மற்றும் வெளிநாட்டு சுற்றுலா வாய்ப்புக்கள்

2. Unit/ Team Manager

**ஆகக் குறைந்த தகைமை**

- காப்புறுதித் துறையில் அல்லது சந்தைப்படுத்தல் துறையில் குறைந்தது 01 வருடம் பணியாற்றிய அனுபவம்.
- சிறப்பான தலைமைத்துவப் பண்பு.
- Target அடைவதற்கான இயலுமை
- புதிய நபர்களை உருவாக்குவதற்கும் வழிநடத்துவதற்குமான இயலுமை.
- சவால்களை எதிர்நோக்கி வெற்றி கொள்வதற்கான விருப்பமும் இயலுமையும்.

**கொடுப்பனவுகள்**

- 20,000 - 50,000 வரையிலான அடிப்படைச்சம்பளம் மற்றும் பிரயாண கொடுப்பனவு
- தரகுப் பணம் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் .
- இலவச காப்புறுதிச் சலுகை மற்றும் வெளிநாட்டு சுற்றுலா வசதி

**தொழில்சார் முன்னேற்றப்பாதை.........**

உங்களது தொழில்சார் முன்னேற்றப்பாதை மிகத் தெளிவான முறையில் வடிவமைக்கப் பட்டுள்ளதுடன் அதனூடாக முகாமைத்துவத்தின் உயர்மட்டத்தை அடைவதற்கு மிகச் சிறந்த வாய்ப்பு..

**நீங்கள் செய்ய வேண்டியது என்ன?**

தன்னிகரற்ற தொழில்சார் நிதித்துறைக்கு நீங்கள் தயாரென்றால் உங்கள் சுயவிபரக் கோவையை கீழ் குறிப்பிட்டுள்ள இலக்கத்திற்கு அனுப்புவதுடன் கீழ்க்குறிப்பிட்ட நேரத்தில் வருகை தரவும்.

**காலம் - 06.01.2021 - 12.01.2021 வரை**
**நேரம் - காலை 9.00 மணி முதல்**

தொடர்புகளுக்கு...

ARPICO Insurance
INSURANCE FOR THE LIVING
No. 86, Navalar Road, Jaffna.
Telephone : 021 2035000
Viber, Whats up தொடர்பு இல : 077 44 25 229



# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
## மருதமுத்து சிவசுப்பிரமணியம்
(மணியம்)

மண்ணில்
19
.
01
.
1938

விண்ணில்
29
.
12
.
2018

திதி : 06.01.2021

காலங்கள் காலத்தால் கடந்து போகலாம்
நினைவுகள் நில்லாமல் சிதைந்து போகலாம்
அன்பு கொண்ட நெஞ்சம் ஒருபோதும்
மறைந்து போகாது. அப்பா. ... அப்பா ....

வீரபத்திரர் கோவிலடி,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.
குடும்பத்தினர்

## அரசியல் கைதிகள்...

இந்தத் தகவலை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்று மாலை தொலைபேசியூடாகத் தன்னிடம் தெரிவித்தார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

கொரோனா என்ற கொடிய வைரஸ் நோய் தொற்றில் இருந்து தமிழ் அரசியல் கைதிகளின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டியதன் நிமித்தம் அவர்கள் அனைவரையும் உடனடியாக அரசு விடுதலை செய்ய வேண்டும் அல்லது அவர்களைப் பிணையிலாவது விடுவிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நேற்று சபையில் தெரிவித்திருந்தார். தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பிணையாளர்களாகத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராகவுள்ளனர் என்ற தகவலையும் அவர் வெளிப்படுத்தியிருந்தார். இந்தநிலையில், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவை நேற்று மாலை தொலைபேசியூடாகத் தொடர்புகொண்ட வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் நேரில் பேசுவோம் என்று கூறியுள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் தற்போது கொழும்பில் நிற்பதால் இன்று அல்லது நாளை இந்தப் பேச்சை ஒழுங்கு செய்யலாம் என்று தினேஷுக்கு மாவை பதிலளித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் அழைப்பின் பேரில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் நேற்று இலங்கை வந்துள்ளார். இதனடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில் தமிழ்க் கட்சிகளை அரசின் சார்பில் அமைச்சர் தினேஷ் குணவர்தன பேச்சுக்கு அழைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-22)

## வாழ்வாதாரத்தை...

தற்கு அனுமதிக்க வேண்டும் என்று மருதனார்மடம் சந்தைச் சூழலிலுள்ள வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பான மனுவை சுன்னாகம் பிரதேச சபைத் தவிசாளரிடம் அவர்கள் கையளித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக கடந்த மாதம் 13ஆம் திகதி மருதனார்மடம் கடைத் தொகுதிகள் அனைத்தும் பொதுமக்களின் நலன்கருதி மூடப்பட்டன. தற்போது இயல்பு நிலைக்கு மாறியிருந்தும், வர்த்தகர்கள் அனைவரும் இரு தடவைகள் பி.சி. ஆர். சோதனைக்கு ஒத்துழைத்திருந்தும் தொற்று இல்லை என்ற அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னரும் எமது வர்த்தக நிலையங்கள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

தற்போதுள்ள சூழலில் வாழ்க்கைச் செலவைக் கருத்தில் கொண்டு, நாம் எமது வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுக்கவும், இந்தக் கடைகளில் பணியாற்றும் ஊழியர்கள் தங்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தவும் ஏதுவாக கடைத் தொகுதியைத் திறக்க அனுமதிக்க வேண்டும். என்றனர். (ஒ5)

## நிலைமைகளை...

எம்மால் வழங்கப்படவில்லை. நிலைமைகளைக் கவனத்திலெடுத்தே அதற்கு அனுமதிகளை நாம் வழங்குவோம்.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மருதனார்மடம் சந்தைக் கொத்தணி பரவலையடுத்து மூடப்பட்டுள்ள தமது வர்த்தக நிலையங்களை மீளத் திறப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று மருதனார்மடம் சந்தைச் சூழலிலுள்ள வர்த்தகர்கள் விடுத்துள்ள கோரிக்கை தொடர்பில் கேட்டபோதே பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

மருதனார்மடம் சந்தைக் கொத்தணியுடன் தொடர்புடையதாக நேற்றும் (நேற்றுமுன்தினமும்) 7பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மருதனார்மடத்திலுள்ள வாகனச் சுத்திகரிப்பு நிலையத்துக்கு வந்து 4 மணி நேரம் நின்று சென்ற ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான சூழலில்எவ்வாறு வர்த்தகநிலையங்களைத் திறப்பதற்கு அனுமதிக்க முடியும்?.

மருதனார்மடம் கொத்தணி குறைவடைந்து இல்லாமல் போகும்போதே அனுமதிகளை வழங்கக்கூடியதாக இருக்கும். நாம் நிலைமைகளை அவதானித்து வருகின்றோம். அதற்கு அமைவாகவே கடைத் தொகுதியைத் திறப்பதற்கான அனுமதியை வழங்க முடியும் என்று சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஒ5)

## பூநகரி...

வருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் கிளிநொச்சி கொரோனா சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 9 பேரும் பளை மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தின் அளவெட்டியைச் சேர்ந்த ஒருவருமாக 11 பேர் வெளிநாடு செல்வதற்காக கடந்த மாதம் 27ஆம் திகதி கொழும்புக்குச் சென்றுள்ளனர்.

அங்கு அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் முடிவுகள் கிடைப்பதற்கு முன்னர் நேற்றுமுன்தினம் வாகனம் ஒன்றில் ஊருக்குத் திரும்பியுள்ளனர்.

சோதனை முடிவுகளில் மூவருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. கொழும்பில் அவர்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து புறப்பட்ட தகவல் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. தொற்றுக்குள்ளானவர்கள் உள்பட அனைவரும் பூநகரிக்கு நேற்றிரவு வந்திருந்த நிலையில் அவர்களைப்பொலிஸார் தனிமைப்படுத்தினர்.

தொற்றுக்குள்ளான மூவரும் கிளிநொச்சி கிருஸ்ணபுரத்திலுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஓ-214)

## மூன்று...

தேசிய மக்கள் முன்னணி, சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய மூன்று கட்சிகளுக்கிடையில் கொழும்பில் இன்று முக்கிய சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களான பாக்கியசோதி சரவணமுத்து, நிமல்ஹா பெர்னாண்டோ மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா நேற்றிரவு 'உதயன' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்திய புதிய பிரேரணை தொடர்பில் தமிழ்த் தரப்புக்கள் ஒன்றுபட்ட நிலைப்பாடொன்றை வெளிப்படுத்துவது தொடர்பில் பேச்சுகள் முன்னெடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே புதிய பிரேரணைக்கான முன்மொழிவுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் தமிழ்த் தேசியத் தளத்தில் உள்ள கட்சிகளை ஒருங்கிணைப்பதற்கான செயற்பாடுகள் கடந்த டிசெம்பர் 29ஆம் திகதி கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவிலும் இரண்டாம் கட்டச் சந்திப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வவுனியாவில் நடைபெற்ற சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய முன்னணியிரும் பங்கேற்றிருந்தனர். அதேநேரத்தில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் இந்த இரண்டு சந்திப்புக்களிலும் பங்கெடுக்கவில்லை. ஆனால், அவரது சார்பில் கிளிநொச்சி கூட்டத்தில் பங்கேற்றிருந்த தமிழ் மக்கள் கூட்டணியின் பேச்சாளர் க. அருந்தவபாலன் வவுனியாக் கூட்டத்திலும் கலந்துகொண்டார். அந்தக் கூட்டணியைச் சேர்ந்த பங்காளிக் கட்சியான தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கமும் வவுனியாக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

ஜெனிவாவில் இலங்கை மீதான புதிய பிரேரணை தொடர்பில் பல்வேறு கருத்தாடல்களும் கட்சிகளின் நிலைப்பாடுகளும் முன்வைக்கப்பட்டிருந்தன. அதில் பூரணமான இணக்கம் இன்னும் ஏற்படாத நிலையில் இன்று கொழும்பில் அரசியல் பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளனர். விசேடமாக இந்தக் கலந்துரையாடல் கஜேந்திரகுமாருக்கும், விக்னேஸ்வரனுக்கும் இடையிலான இடைவெளிகளைக் குறைப்பதை நோக்கமாகவும் கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை, இன்றைய கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் கலந்துகொள்ளவுள்ளன என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மேலும் கூறினார். (எ-22)

## கோத்தா, மஹிந்த...

சர் தினேஷ் குணவர்தனவின் அழைப்பின் பேரில் கொழும்புக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர், நேற்றுப் பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். இவர் நாளை வரை கொழும்பில் தங்கியிருந்து பல்வேறுமட்ட பேச்சுகளை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோரை மூவரினதும் உத்தியோகபூர்வ அலுவலகங்களில் இன்று தனித்தனியே ஜெய்சங்கர் சந்திக்கின்றார்.

இதேவேளை, இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இவர் நாளை சந்திக்கவுள்ளார். இந்தச் சந்திப்பு இலங்கைக்கான இந்தியத் தூதுவரின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது எனக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

தாமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா (தமிழரசுக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் ஜெய்சங்கருடனான சந்திப்பில் கலந்து கொள்வார்கள் எனவும் சம்பந்தன் தெரிவித்தார். அதேவேளை, பல பிரமுகர்கள், வணிகத் தலைவர்கள் ஆகியோரையும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சந்திக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு இலங்கைக்கு வரும் முதலாவது வெளிநாட்டு இராஜதந்திரி இவர் என்பதுடன் இந்த ஆண்டின் இந்திய வெளிவிவகார அமைச்சர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணமும் இதுவாகும். (எ-22)

## தமிழர்களின்...

கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் தெரிவித்ததாவது

கொரோனா வேகமாக பரவிவரும் தற்போதைய சூழ்நிலையில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி வடக்கு, கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் நேற்றுக் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஜனாதிபதிக்கு மனுவொன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

சிறைகளில் வாழும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் என்பதே ஒட்டுமொத்த தமிழ் மக்களதும் கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கைக்கு செவிமடுத்து தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் மன்னிப்பின்கீழ் விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பிணையாவது வழங்கவேண்டும். அதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிணைக் கையொப்பம் வைப்பதற்கு தயாராகவே இருக்கின்றனர்.

அமைச்சர்கள், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் இதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும்- என்றார். (ஓ-44)

## மயங்கி...

னிளிக்காது மயக்க நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை வீதி, நல்லூரைச் சேர்ந்த தெ.தர்சன் (வயது 29) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் திருநெல்வேலியில் உள்ள கடை ஒன்றில் பணியாற்றும் நிலையில், கடந்த 2ஆம் திகதி கடையில் திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் நேற்றுமுன்தினம் இரவு மயக்க நிலையிலேயே உயிரிழந்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காக உடல் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26, 25)

# இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடர் வழித்துத்துடைத்தது தென்னாபிரிக்கா!

## இரண்டரை நாள்களில் முடிந்த ஆட்டம்

ஜோகன்ஸ்பேர்க், ஜன. 6

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 10 இலக்குகளால் வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா அணி.

முதல் டெஸ்ட்டில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸால் வெற்றிபெற்றிருந்த நிலையில் தொடரை அந்த அணி வழித்துத் துடைத்தது.

ஜோகன்ஸ்பேர்க் மைதானத்தில் கடந்த 3ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

வெறும் 157 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது இலங்கை அணி. அதிகபட்சமாக குசல் பெரேரா 60 ஓட்டங்களையும், வனிந்து ஹசரன்க 29 ஓட்டங்களையும், சமீர 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நோர்ஜி 6 இலக்குகளையும், முல்டர் 3 இலக்குகளையும், சிபம்லா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.



பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 302 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக எல்கர் 127 ஓட்டங்களையும், வான் டெர் டசன் 67 ஓட்டங்களையும், பவுமா 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் விஷ்வ பெர்னான்டோ 5 இலக்குகளையும், அஷித பெர்னான்டோ, டசுன் சானக இருவரும் தலா இரு இலக்குகளையும், சமீர ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இலங்கை அணி 211 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. அணித் தலைவர் கருணாரத்ன மிகச் சிறப்பாக விளையாடி சதம் கடந்தார். அவர் 103 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். டிக்வெல்ல 36 ஓட்டங்களையும், திரிமன்னே 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் லுங்கி இங்கிடி 4 இலக்குகளையும், சிபம்லா 3 இலக்குகளையும், நோர்ஜி 2 இலக்குகளையும், முல்டர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்ற காரணத்தால் தென்னாபிரிக்கா அணிக்கு வெறும் 67 ஓட்டங்களே இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களான எய்டன் மார்க்ரம், டீன் எல்கர் இருவரும் வெற்றியிலக்கை அடைந்தனர். இதையடுத்து 10 இலக்குகளால் வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா. மார்க்ரம் 36 ஓட்டங்களையும், எல்கர் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆட்டநாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் எல்கர் தெரிவானார். (ம)

## ஹெரோய்ன் வைத்திருந்தார் என சாவகச்சேரியில் ஒருவர் கைது!

சாவகச்சேரி, ஜன. 6

சாவகச்சேரி உதயசூரியன் கிராமத்தில் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். சாவகச்சேரி மதுவரி நிலையத்தால் அவர் கைதுசெய்யப்பட்டார்.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து நேற்று மாலை 4 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் நீதிமன்றத்தால் ஏற்கனவே தண்டிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)




## மத்தியஸ்தர் சபை அமர்வுகள் ஆரம்பம்

பளை, ஜன. 6

பச்சிலைப்பள்ளி பிரதேச மத்தியஸ்தர் சபையின் அமர்வுகள் எதிர்வரும் ஒன்பதாம் திகதி தொடக்கம் நடைபெறும் என்று சபையின் தவிசாளர் வ.ஜீவரத்தினம் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த சபையின் அமர்வுகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து அமர்வுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் அதிக அளவில் பிணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டு வருவதால் மாதத்தில் ஆறு நாள்கள் அமர்வுகள் நடத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## கொரோனாச் சாவு 217 ஆக அதிகரிப்பு

கொழும்பு, ஜன.6

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன அறிவித்துள்ளார். மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதான பெண் ஒருவர் கடந்த 3 ஆம் திகதி மாத்தளை மாவட்ட வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். இவரது சாவுக்கான காரணம் கொரோனாத் தொற்றுடன் ஏற்பட்ட சுவாசக் கோளாறு என அடையாளம் காணப்பட்டுள்ளது.

களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதான பெண் ஒருவர் கடந்த 2ஆம் திகதி களுத்துறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

கொரோனா தொற்று மற்றும் இரத்தம் விஷமடைந்தமை ஆகியன காரணமாக இவர் சாவடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 217 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 204 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர். (எ-22)

**காணி தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், மானிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசத்திற்குள் 10 தொடக்கம் 30 வரையான பரப்பளவு காணி தேவை. தரகர் தேவையில்லை.

தொடர்புகொள்ளவும்: **076 2212 037**

**வேலைக்கு ஆட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் வியாபார நிலையம் ஒன்றிற்கு கணினி அறிவுடைய (Photoshop) பெண் பிள்ளைகள் தேவை. யாழ் மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்கள்.

**T.P: 076 166 1986**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் இருந்து இருபாலை வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து கொடுக்கப்படும். 1 1/2 பரப்பாக. தரகர் தேவையில்லை.

**077 2880 152**
**077 505 8561**
(பழனியாண்டவர் கோயில் முன்பாக)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மானிப்பாய் மேற்கு கட்டுடை சந்தியில் இருந்து நவாலி வீதியில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து கொடுக்கப்படும். 2 பரப்பாக. தரகர் தேவையில்லை.
(பரப்பின் விலை 5 லட்சம்)

**074 075 4204.**

**புலமை கல்வி நிறுவனம்**
சோதிவேம்படி லேன்,
மானிப்பாய்.

ஆசிரியர் திரு.க. கலாமோகன்
B.A, P.G.D.E, Dip.in.Teach
தரம் 4, 5 மாணவர்களுக்கான
ZOOM வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு - **077 212 1915**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.